Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 24 வெள்ளிக்கிழமை (08.07.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 201

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

## சேது சமுத்திரத்திட்ட விவகாரம்

# இந்தியா சுயமாகச் செயற்பட்டால் சர்வதேச நீதிமன்றில் முறையிடப்படும்

## பாராளுமன்றில் லக்ஷ்மன் கதிர்காமர்

(கொழும்பு)

**சேது சமுத்திர கால்வாய் வெட்டும் திட்டத்தை இந்தியா தன்னிச்சையாக முன்னெடுத்தால் அவ்விடயத்தை சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டுசெல்லப்போவதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார். சேது சமுத்திர திட்டம் தொடர்பாக நேற்று பாராளுமன்றத்தில் நீண்ட அறிக்கையொன்றை சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

அயல்நாடான இந்தியா் எமது நட்பு நாடு. பேச்சுகள் ஊடாக எந்தப் பிரச்சினையையும் தீர்த்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக கதிர்காமர் தெரிவித்தார்.

சேது சமுத்திரத்தை ஆழப்படுத்தும் இந்தியாவின் நடவடிக்கை குறித்தும், இலங்கையின் நிலைப்பாடு குறித்தும் விளக்கமளிக்கும் நீண்ட அறிக்கையொன்றினை வெளிவிவகார அமைச்சர் நேற்றுப் பாராளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

இதன்போது குறுக்கிட்ட ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையினதும், அதன் மக்களின

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுத் தலைவர் நேற்று திருகோணமலை விஜயம்

### பல்வேறு தரப்பினருடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட் நேற்று திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டார். அங்கு அவர் மாவட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஒபே யோனிஸன், மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களுடன் மாவட்டத்தின் சமகால நிலைபற்றி விரிவான பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதனையடுத்து கிழக்குப் பிராந்தியப் பொலிஸ்மா அதிபராக அண்மையில் பதவியேற்ற அபயகுணவர்த்தனவைச் சந்திதது பேச்சுவார்த்தை நடத்தினார். இச்சந்திப்புக்களை அடுத்து மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி சனத் பாலசூரிய, பிராந்திய கடற்கடை அதிகாரி வசந்த கருணாகொடவையும், கடற்படைதளத்தின் கேட்போர் கூடத்தில் அவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

குறிப்பாக விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்திற்கான பயணத்தை மேற்கொள்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அரசுக்கு இரண்டுவாரக் காலக் கெடுவினை விதித்திருக்கின்றனர்.

அரசு பாதுகாப்பான பயணத்தை தமது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனில் தொடர் குண்டுவெடிப்பு 40 பேர் பலி; 300 பேர் படுகாயம்

(லண்டன்)

பிரிட்டிஷ் தலைநகரான லண்டனில் மத்திய பகுதியில் சுரங்க ரயில் பாதைகள், ரயில் நிலையங்களில் நேற்று தொடர் குண்டுவெடிப்புக்கள் இடம்பெற்றன. லண்டன் நேரப்படி நேற்றுக் காலை 8.50 மணிக்கு முதலாவது குண்டுவெடித்தது. இந்த முதலாவது குண்டு சுரங்கப் பாதையில் உள்ள இரண்டு ரயில் நிலையங்களுக்கு இடையில் பாரிய சத்தத்துடன் வெடித்தது.

முதலாவது குண்டுவெடிப்பினை அடுத்து 10.15, 10.25 எனத் தொடர்ந்தும் குண்டுகள் ரயீல் நிலையங்களில், ரயில் பாதைகளில் வெடித்தன. அல்கேட் ஓஸ்ரேட்ஸ், கிங் றொஸ்ட் ஆகிய சுரங்க ரயில் நிலையங்களில் இந்தக் குண்டுவெடிப்புச் சம்பங்கள் இடம்பெற்றுள்ளன.

குண்டுவெடிப்புச் சம்பவங்களை அடுத்து சுரங்க ரயில்சேவைகள் யாவும் உடனடியாகப் நிறுத்தப்பட்டன. அத்துடன் சகல போக்குவரத்துகள் நிறுத்தப்பட்டு பொலிஸார் மோப்பநாய்கள் உடன் குண்டுவைக்கப்பட்டுள்ள இடங்களைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகா நோபல் பரிசுக்கு சிபார்சு

### ஒஸ்லோ ஆராய்ச்சியாளர்கள் பரிந்துரை

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு நோபல்பரிசு வழங்குவதற்கு ஒஸ்லோ பல்கலைக்கழகத்தின் இரண்டு ஆராய்ச்சியாளர்கள் பரிந்துரை செய்துள்ளனர்.

டாக்கல் வேபி மற்றும் எரிக் பிரிக் ஆகியோரே இந்தப் பரிந்துரையை விடுத்துள்ளார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளை போர்என்ற நிலையிலிருந்து விலகிச்செல்வதற்கு பல தடங்கல்களை ஜனாதிபதி சந்திரிகா எதிர்கொள்வது உட்பட பல காரணங்களை மையமாகக்கொண்டு நோபல பரிசுக்கு அவரைத் தாம் பரிந்துரை செய்வதாக குறித்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நடைமுறையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் சமாதான வழியிலேயே செயற்பட்டு வருகின்றனர். எனினும் அரசாங்கக் கட்சிகளே ஜனாதிபதிக்குப் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஊர்காவல் படை வீரர்கள் மூவர் தமிழீழ நீதிமன்றத்தால் விடுதலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட எல்லைப்புறத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தடை செய்யப்பட்ட பாதையூடாக பிரவேசித்து நடமாடினார்கள் என்ற குற்றஞ்சாட்டின்பேரில் விடுதலைப் புலிகளினால் கைதுசெய்யப்பட்டு தமிழீழ நீதிமன்ற உத்தரவின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சிங்கள ஊர்காவல்படை வீரர்கள் மூவரும் நேற்று விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

வக்கியல்லவைச் சேர்ந்த சோனாறு முதியன் சலாகே சமிந்த (வயது 24), சூரிய பெரும ஆராச்சிகே ஜானக பிரதீப் குமார (வயது 22), மற்றும் அத்தநாயக்க முதியன் சலாகே, சமிந்தபால (வயது 20) ஆகிய மூவரும் கடந்த மேமாதம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# குருநகரில் இடம்பெற்ற சம்பவத்திற்கு அப்பகுதி இராணுவமே முழுப்பொறுப்பு!

## மனிதஉரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

குருநகரில் கடல்தொழிலுக்குச் சென்று திரும்பும்போது கடந்த 2 ஆம் திகதி அதிகாலை குருநகர் இறங்குதுறையில் அமைக்கப்பட்டிருந்த இராணுவப் பாதுகாப்பு முட்கம்பிவேலியில் சிக்குண்டு மின்சாரம் தாக்கி இளைஞரொருவர் இறந்த சம்பவம் தொடர்பான விசாரணை நேற்றுக் காலை இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது.

இவ் விசாரணையில் 512 ஆவது இராணுவக் கட்டளை அதிகாரி மற்றும் சம்பவத்துடன் தொடர்புடைய முகாம் பொறுப்பதிகாரி ஆகியோர் சமுகமளித்தனர்.

இவர்களிடம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி ரோகித பிரியதர்சன விசாரணைகளை மேற்கொண்டார்.

விசாரணையின்போது சம்பவம் ஏற்படுவதற்கான காரணம் யாதென முகாம் பொறுப்பதிகாரியிடம் கேட்டபோது இச்சம்பவமானது தற்செயலாக இடம்பெற்றது என அவர் தெரிவித்தார்.

இக்கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். இணைப்பதிகாரி இச்சம்பவம் ஏற்படுவதற்கான முழுக் காரணத்தையும் குறிப்பிட்ட இராணுவ முகாமிலுள்ள படையினரே ஏற்க வேண்டும் எனக் கூறினார்.

குறுகிய பாதையூடாக கடற்தொழிலாளர்களைச் செல்வதற்கு அனுமதித்திருந்த போதிலும், மின்சாரம் தொடர்பாக அக்கறை கொள்ளாது அசட்டையீனமாக இருந்ததாலேயே இச்சம்பவம் ஏற்பட்டுள்ளதென குற்றஞ்சாட்டினார்.

குருநகர் இறங்குதுறையால் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட குருநகர் கடற்தொழிலாளர்கள் தினமும் கடலுக்குள் சென்றுவரு

(10 ஆம் பக்கம் பார்க்க)




EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-234999
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com,reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கோயிற் பழக்கம் கைக் கொள்ள வாழ்வில் வளம் மிகுந்து வரும்!

## வெள்ளிநற்சிந்தனை

ஆலயம் தொழுவது சாலவும நன்று, கோயில் இல்லாதவூரில்



குடியிருக்க வேண்டாம், ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம், திருக்கோயில் இல்லாதது திருவில் ஊர், நீறில்லா நெற்றி பாழ் - இவ் வாக்கியங்கள் யாவும் சான்றாண்மை மிக்க ஆன்றோரால் அருளிச் செய்யப்பெற்ற ஆப்த மொழிகள்.

ஊர்கள் தோறும் திருக்கோயில் அமைந்திருக்க வேண்டியதையும், ஆலய வழிபாட்டின் அவசியத்தையும் அவ் வாக்குகள் நன்கு எடுத்து உணர்த்துவன.

தரணியில் திருக்கோவில்கள் தருமத்தைத் தாங்கும் சுமை தாங்கிகளாகும். சமயிகளுடைய இன்ப துன்பச் சுமைகளைத் தாங்கும் நிலைக்களமாக நிலைத்து நிற்பது திருக்கோவில்கள்.

வயது வந்த பிள்ளைக்கு வரன்வந்து வாய்க்கவில்லையே என்று பெற்றோர் விடும் பெருமூச்சு, பரீட்சைப் பெறுபேறு என்னவாக வந்து வாய்க்குமோ என்று மாணவனின் மனக் கவலை, கற்றும் கால் நடந்தும் தொழில் வாய்ககவில்லையே என்ற சோர்வு போன்று சமுதாயத்தில் பெருக்கெடுக்கும் சோக எண்ண அலைகளை இடிக்கும் நிலைக்களமாக நிலைத்து நிற்பது நீள் நிலைக் கோபுரங்களோடு கூடிய கோவில்கள்.

இவ்வாறான மனக் குறைபாடுகள் நிவிர்த்தியாதலும் நேர்த்திகள் செய்தும் விழாக்களைக் கொண்டாடியும் சாந்தி செய்வார்கள்.

திருமணம் நிகழ்ந்ததும் ஆலய தரிசனம் பண்ணுவார்கள். பெற்ற குழந்தையை ஆலயத்திற்கு எடுத்துச் சென்ற பின்பு பிற இடங்களுக்குக் கொண்டு போவார்கள். பிள்ளைப்பேறின்மையைத் தவிர்கத் திருக்கோயில் வழிபாடு செய்வார்கள். நோன்பு அனுட்டிப்பார்கள். பெற்ற பிள்ளைக்கு ஆலயத்தில் பாற்சோறு ஊட்டுவார்கள். இல்லத்தில் நிகழும் கிரியைகளுக்கு ஆலய குருவை அழைப்பார்கள். கிரக பீடைச் சாந்தி, நூல் கட்டுதல், கற்பூரச் சட்டி எடுத்தல், நூல் எடுத்தல், வீபூதி போடுதல் போன்ற அனைத்து நிகழ்வுகளுக்கும் ஆலயத்தை நாடிச் செல்லும் வழக்கம் நெடுங் காலமானதொன்று.

திருக்கோவில் சைவ சமயத்தவர்களுடைய உளக்குறைபாடுகளுக்குத் தரிப்பிடமாக அவர்களுடைய மன உணர்வுச் சுமைகளைத் தாங்கும் மையமாக மறைமுகமாக விளங்கும்.

அவ்வாறான திருக்கோவில்களில் சென்று வழிபாடு ஆற்றும் போது பார்த்துப் பழகுவதும், கேட்டுப் பழகுவதும், 'சிந்தித்துச் செயற்படுவதுமான செய்கைகள் யாவும் கோவிற் பழக்கம் என்னும் வார்த்தையில் அடங்கும்.

ஆலய வழிபாடு வீதி வலம் வருதல், அரிச்சனை செய்வித்தல், அட்டாங்க, பஞ்சாங்க வணக்கத்தோடு அமைவதில்லை. கோயில பழக் கமும் சிறந்த வழிபாடு எனலாம்.

திருக்கோயிலில் திருவிளக்கேற்றல், பாத்திரங்களைப் பரிசுத்தம் செய்தல், தூபமிடல், குடை, கொடி,ஆலவட்டம், தீவர்த்தி தாங்குதல், சுவாமி எழுந்தருளும் போது வாகனம் தாங்குதல், அழகிடல், மெழுக்கிடல், மலர்கொய்தல், வீண்வார்த்தை பேசாதிருத்தல், மாலை தொடுத்தல், கோலமிடுதல், திருமுறை ஓதல், புராணம் வாசித்தல், கேட்டல், தோரணம்கட்டுதல், கமுகு வாழைகளால் அலங்கரித்தல், கோவிலில் செய்யத்தகாத குற்றங்களைத் தவிர்த்தல், ஆசார சீலர்களாக ஆலயத்திற்கு வருதல், சிவனடியார்களுக்குத் தொண்டு புரிதல் போன்றவற்றையும் கோயிற் பழக்கமென்னும் பெயரால் அழைப்பர்.

கோயில் பழக்கத்தைப் பலகாலம் பண்போடும் பயிலப் பயில திருவருள் தானாக வந்து பதியும். வாழ்க்கையில் சண்ட மாருதமாக வரும் ஆபத்துக்கள் சூரிய ஒளி கண்ட புல்நுனிப்பனி போலாகும்.

கோயில் பழக்கம் நாளும் கைக்கொள்ள நற்பழக்கம் நல்லொழுககமாகமாறும். கள்ளமிலலா உளஎம் உருவாகும். பழக்கம் வழக்கமாகி ஒழுக்கத்தில் உயர மேலான விழுப்பம் தரும். □

**சிவ சண்முகவடிவேல்**

## சிறுவிளம்பரம்


**மலையாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை, தொழில், வியாபார இலட்சிகர விடயங்கள். வவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

**ஹோட்டல் பிள்ளையார் இன்**
**அறை இல.09,**
**31, மானிப்பாய் வீதி**
**யாழ்ப்பாணம்.**
**T.P - 0779122836**
**நேரம் காலை 9.00 -**
(9567) **இரவு 8.30 வரை**


## தாச்சி சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் மற்றும் விளையாட்டுத்துறை ஆகியோரின் அனுசரணையுடன் கோணடாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில்,

இன்று மாலை 5.00 மணிக்கு இணுவில் கலாஜோதி அணியை எதிர்த்துக் கைதடி குமாரநகர் அணி மோதவுள்ளது. (அ-7)

## இராசி பலன்

**08.07.2005**
**(ஆனி 24, வெள்ளிக்கிழமை)**
**துதியை முன்னிரவு 9.34 மணிவரை**
**பூசம் முன்னிரவு 10.06 மணிவரை**
**இராகுகாலம் 10.28 - 11.58 மணிவரை**
**சுபநேரம் 5.58 - 7.28 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | மனச்சஞ்சலம், மாதாசுகம், காரியதாமதம், உடல்நலக்குறைவு. |
| இடபம் | கூட்டு முயற்சி, போசனநன்மை, பிரயாணம், நண்பர்கள் சந்திப்பு. |
| மிதுனம் | அதிக வார்த்தை, வேலைச்சுமை, எடுத்த காரியம்தாமதமாகும், போசனசுகக்குறைவு. |
| கடகம் | தெய்வசிந்தை, உறவினர் சந்திப்பு, நல்ல செய்தி, முயற்சி கைகூடும். |
| சிங்கம் | பிரயாணம், அமைதிக்குறைவு, தொழில் மந்தநிலை, பணவிரயம். |
| கன்னி | பெருமையடைதல், காரிய அனுகூலம், தன வருவாய், சகோதரர் உதவி. |
| துலாம் | அதிகாரம், நல்லவரவேற்பு, முயற்சி பலிதம், போசனசுகம். |
| விருச்சிகம் | புதிய திட்டமிடல், உடல்நலக்குறைவு, காரியசிந்தை, பிரயாணம். |
| தனுசு | வீண் அச்சம், காரிய தடங்கல், பணவிரயம், ஆரோக்கியக்குறைவு. |
| மகரம் | கலந்துரையாடல், தொழில் வருமானம், காரிய சித்தி, அபூர்வசந்திப்பு. |
| கும்பம் | தேகநலன், நல்ல தகவல், முயற்சி கைகூடும், போசனசுகம். |
| மீனம் | வியாபார நன்மை, உடல்நலக்குறைவு, கௌரவக்குறைவு, முயற்சி தாமதம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
**- வளவன்**

## இந்திய உயர்ஸ்தானிகர் திடீர் மன்னார் விஜயம்

(மன்னார்)

இந்திய உயர்ஸ்தானிகர் நிருபமாராவ் நேற்று மன்னார் மாவட்டத்துக்கு திடீர் விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

இவருடன் வன்னிப்புனர்வாழ்வு அமைச்சர் ரிஷாத் பதியுதீன், மன்னார் மாவட்ட அரச அதிபர் வி.விஸ்வலிங்கம், வினோ நிறுவனத்தின் தலைவர் அன்பர் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர்.

அதிஉயர் பாதுகாப்பு வலயமாக விளங்கும் மன்னார் கடற்படை முகாமிற்குச் சென்ற இவர்கள் அங்கு சேது சமுத்திரத்திட்டம் தொடர்பாகவும் மன்னார் பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பாகவும், மன்னார் துறைமுக அபிவிருத்தி தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.

இதன் பின்னர் இவர்கள் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையைச் சந்தித்தனர்.

இருந்தபோதும் இந்திய உயர்ஸ்தானிகரின் விஜயம் தொடர்பாக இலங்கை அரசாங்கமோ, இந்தியத் தூதரகமோ உத்தியோகபூர்வமாக எதனையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (து-4)

## விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்ய வடக்குக் கிழக்குக்கு நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

வடக்கிலும் கிழக்கிலும் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை மெய்வல்லுநர் சங்கம் உதவி வழங்க இருக்கிறது. சங்கத்தின் தலைவரும் அமைச்சருமான ஜனக பண்டார அமரக் கோன் இந்த நடவடிக்கைகளுக்கென 5 இலட்சம் ரூபாவை வழங்குவதற்கு முன்வந்துள்ளார். கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், தேசிய மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் 'சுகததாஸ' விளையாட்டரங்கில் இம் மாதம் 15, 16 ஆம் திகதிகளில் நடாத்தப்படுவதற்குரிய சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார். (அ-7)

**மட்டு. மாவட்டத்தில்**

## செஞ்சிலுவைச் சங்கம் வீடுகளை அமைக்கும்

(மட்டக்களப்பு)

சுனாமி அனர்த்தத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் சேதமடைந்த 2000 வீடுகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் அமைத்துக் கொடுக்கவுள்ளதாக அதன் தலைவர் அபயசிங்க தெரிவித்துள்ளார்.

பாதிப்படைந்த வீடுகளை நேற்றுமுன்தினம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளும் சென்று பார்வையிட்டனர்.

மட்டக்களப்பின் திராய்மடு, ஒல்லிக்குளம், பூனுச்சிமுனை ஆகிய இடங்களையும், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட காத்தான்குடி மாவட்டவைத்தியசாலையையும் இந்தக் குழுவினர் பார்வையிட்டுள்ளனர்.(ற-8)

## 2160 மில்லியன் செலவில் தென்மராட்சி அபிவிருத்தி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தின் போது சேதமடைந்த பகுதிகளை மீளக் கட்டியெழுப்பவும், புனரமைப்புச் செய்யவும் 2160 மில்லியன் ரூபா தேவைப்படு மென தென்மராட்சி செயலகத்தின் திட்டமிடல் பிரிவு மதிப்பீடு செய்துள்ளது.

இந்த புனரமைப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் நிதி வழங்கும் அமைப்புக்களிடமும் கோரிக்கைகள் விடப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

இதேவேளை, யுத்தத்தினால் சேதமடைந்து சிதைவுற்றிருக்கும் சாவகச்சேரி நகரத்தைத் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நவீனமயப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப் பட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

சாவகச்சேரி நகரத்தை நவீனமயப்படுத்தும் வகையில் கொழும்பிலிருந்து உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று சாவகச்சேரிக்கு விஜயம் செய்து யுத்தத்தால் சேதமடைந்து புனரமைப்பு செய்யப்பட்ட நவீன சந்தையையும் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையையும் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் யுத்தத்தின் போது பாதிப்படைந்த வர்த்தக நிலையங்களை புனரமைப்புச் செயவதற்கு அரசினதும் நிதிவழங்கும் அமைப்புக்களினதும் நிதியுதவியை எதிர்பார்த்திருந்த வர்த்தகர்கள் இறுதியில் தாம் ஏமாற்றம் அடைந்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

யுத்தத்தால் சேதமடைந்த வர்த்தக மற்றும் பொது அமைப்புக்களின் கட்டடங்களைப் புனரமைப்புச் செய்வதற்கு நட்டஈடு கோரி சாவகசசேரி வர்த்தகர்கள் அரசுக்கு சமர்ப்பித்த முறைப்பாடுகளுக்கு இதுவரை எந்த சாதகமான பதிலெதுவும் கிடைக்காததால் வர்த்தகர்கள் விரக்தியடைந்த நிலையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து-9)

## சந்திப்பு

தென்னாபிரிக்கத் தமிழர் குழுவினருடனான சந்திப்பு நிகழ்ச்சி ஒன்று உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க அகிலப் பொதுச் செயலாளர் ஆ.சண்முகலிங்கம் தலைமையில் இல 60, அரசடி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள தொண்டர் நிறுவனத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளதாக உலத் தமிழ் பண்பாட்டு இயக்கச் செயலாளர் இதவ கோபால் தெரிவித்துள்ளார். (அ)


## உடன் விற்பனைக்கு உண்டு

**பின்வரும் பொருட்கள் விற்பனைக்கு உண்டு**

- ஒவ்செற் பிளேற் (பாவித்தது)
- ஈய எழுத்துக்கள் மற்றும் ஈய லெற்றுகள் (புதியது)
- புத்தகம், கொப்பி என்பவற்றிற்கு கிளிப்பிடும் மெசின் (அச்சகங்களுக்குரியது, சிறிய திருத்தம் உண்டு)
- சிறிய ஜெனறேற்றர்
- ஈய எழுத்துக்கள் வைக்கப்படும் கேஸ் (பலகையினாலானது)
- கோழிக்கூடுகள் மற்றும் கதிரைகளுக்கான பாலைத்தடிகள்
- வெற்றுப் பைவர்கள் (6 லீற்றர்)

**மலிவான விலையில் வழங்கப்படும். பார்வையிடும் நேரம் தினசரி மாலை 4.00 மணிக்குப் பின்னர்.**

தொடர்பு:-
விற்பனை முகாமையாளர்
வலம்புரி
இல 3, 2ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில்)

## இன்று ஒரு தகவல்

# போதும் என்ற மனம்

ஒரு ஊரில் ஒரு பெரிய மனிதர் இருந்தார். வசதியில் தான் பெரிய மனிதனே தவிர குணத்தில் அப்படி இல்லை. இன்னும் பெரிய மனிதனாக வர வேண்டுமென்று ஆசைப்பட்டார். அதனால் யாருக்கும் ஒரு பைசாகொடுக்க மாட்டார். மகா கஞ்சப் பிரபு அடுத்தவர்கள் நன்றாக இருந்தால் அதை இவரால் தாங்கிக்கொள்ள முடியாது. பொறாமைப்படுவார் அப்பேர்ப்பட்ட பெரிய மனிதன்.

அவர் வீட்டுக்கு நேர் எதிரில் ஒரு ஏழை இருந்தார். இவர் மிகவும் நல்லவர் அடுத்தவர்கள் கஷ்டப்பட்டால் அதை இவரால் தாங்கிக் கொள்ள முடியாது தான் கஷ்டப்பட்டாலும் அடுத்தவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைப்பவர் ஒரு நாள் ஒரு சந்நியாசி அந்த ஊருக்கு வந்தார். அந்த பெரிய மனிதனின் வீட்டுக்கு முன்னால் போய்நின்றார். கதவைத் தட்டினார். கதவைத்தட்டிய சத்தம் உள்ளேயிருந்த பெரிய மனிதனின் காதில் விழுந்தது இருந்தாலும் அவர் கதவைத்திறக்கவில்லை "கதவைத்திறந்தால் யாராவது ஏதாவது கேட்பார்கள் கொடுக்க வேண்டியிருக்கும்" என்று நினைத்துக்கொண்டு போசாமல் இருந்து விட்டார்.

சந்நியாசி கொஞ்ச நேரம் நின்று பார்த்தார். யாரும் கதவைத் திறக்கவில்லை என்றவுடன் எதிர்வீட்டுக்குப் போய்விட்டார் அது தான் அந்த ஏழையின் வீடு கதவைத்தட்டினார். உடனே அந்த ஏழையும் அவரது மனைவியும் கதவைத்திறந்தார்கள். சந்தியாசியைப் பார்த்தும் "உள்ளே வாருங்கள் எனறு கூப்பிட்டார்கள். உட்காரவைத்தார்கள் இரவுச் சாப்பாடு முடிந்து விட்டது. அதனால் புதிதாக சமையல் செய்து அவருக்கு கொடுத்தார்கள்.

சந்நியாசி திருப்தியாகச் சாப்பிட்டார். சாப்பிட்டு விட்டுப் புறப்படும் சமயத்தில் அவர்களைப் பார்த்து "எனக்கு மிகவும் திருப்தியாக இருக்கிறது. உங்களுக்கு ஏதாவது உதவி செய்யவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஏதாவது மூன்று வரம் கேளுங்கள் தருகிறேன்" என்றார். அதற்கு அந்த ஏழையும் அவரது மனைவியும் "உங்கள் அன்புக்கு மிகவும் நன்றி சுவாமி. இருந்தாலும் எங்களுக்கு வரம் எதுவும் தேவையில்லை ஏனென்றால் இப்போதே நாங்களிருவரும் மிகவும் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறோம்"என்றார்கள். இருப்பதைக் கொண்டு திருப்தியடையும் ரகம் அவர்கள்."போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்ற பொன் மொழியைப் புரிந்து வைத்திருப்பவர்கள் போலிருக்கிறது.

சரி என்று சொல்லி சந்நியாசி புறப்பட்டார் இருந்தாலும் அவரால் சும்மா போக முடியவில்லை இவர்களுக்கு ஆசீர்வாதம் செய்தே தீரவேண்டும் எனறு முடிவெடுத்தார். ஆசீர்வாதம் செய்தார் உடனே அந்த ஏழையின் வீடு ஒரு மாளிகையாக மாறியது. அடுத்த நாள் காலையில் அந்த பெரிய மனிதன் தன் வீட்டு வாசல் கதவைத்திறந்து பார்த்தார். ஒரே ஆச்சரியம் எதிரில் வழக்கமாக காணும் குடிசையைக் காணவில்லை அது மாளிகையாக மாறியிருந்தது. இதற்கு என்ன காரணம் என்று விசாரித்து விபரத்தைப் புரிந்து கொண்டார்.

உடனே அந்த சந்நியாசியைத் தேடிக்கொண்டு காரில் கிளம்பினார். ஒரு காட்டுக்குள் அவர் உட்கார்ந்திருந்தார். அவரது காலில் போய் விழுந்தார். "என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் சுவாமி! ஏதோ தெரியாத்தனமாக அப்படி நடந்து கொண்டேன்" என்றார். "இப்போது உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார் சந்நியாசி. "வேறு ஒன்றும் வேண்டாம் அந்த ஏழைக்குக் கொடுப்பதாகச் சொன்ன அந்த 3 வரங்களை மட்டும் எனக்குக் கொடுத்தால் போதும் என்றார்" "சரி! கொடுக்கிறேன். ஆனால் ஒரு விடயம் உனக்கு என்ன வேண்டுமென்று நீ முதல் மூன்று முறை எதை நினைக்கிறாயோ அது அப்போதே கிடைத்துவிடும்" என்று கூறி அனுப்பினார். சந்நியாசி.

சரியென்று வரத்தை வாங்கிக்கொண்டு அந்தப் பெரிய மனிதன் காரை எடுத்துக்கொண்டு உற்சாகமாகப் புறப்பட்டார். வழியில் ஒரு இடத்தில் சகதியில் மாட்டிக்கொண்டது கார். அவருக்கு எரிச்சலாக வந்தது. "நமக்கு வரம் கிடைத்த விடயத்தை சீக்கிரமாகப் போய் ஊர் முழுதும் சொல்லாம் என்று நினைத்தால்... இடையில் இந்தக் கார் இப்படி மக்கர் செய்கிறதே இந்தக் கார் இருந்தாலும் ஒன்றுதான் எரிந்து போனாலும் ஒன்றுதான்" என்று நின்னைத்தார். அவ்வளவுதான் அவர் வாங்கிய வரம் வேலை செய்ய ஆரம்பித்தது.

கார் அப்படியே தீப்பிடித்து எரிந்து சாம்பலாகிவிட்டது. வாங்கிய முதல் வரம் தீர்ந்தது "சரி பரவாயில்லை... இன்னும் இரண்டு வரம் எஞ்சியுள்ளது பார்த்துக்கொள்ளலாம்" என்று நினைத்து நடந்தே வீட்டுக்குப் போனார். உச்சி வெயில் வியர்க்க விறுவிறுக்க நடந்து கொண்டிருந்தார்.தாகம் வேறு தண்ணீர் கிடைக்கவில்லை மனைவியை நினைத்தார். "நான் இப்படி கொதிக்கும் வெயிலில் நடந்து கொண்டிருக்கிறேன். அவள் மட்டும் ஆனந்தமாக ஏஸி அறையில் உட்கார்ந்திருப்பாள் என் கஷ்டம் அவளுக்கு எங்கே தெரியும் அந்த பங்களா பற்றி எரிந்தால் தான் என் கஷ்டம் என்னவென்று அவளுக்குப் புரியும்"என்று நினைத்தார்.

அவ்வளவுதான் இரண்டாவது வரம் வேலை செய்தது பங்களா பற்றி எரிந்து விட்டது. மனைவிக்கோ தீக்காயம் அதை நேரில் பார்த்தார். "இப்படிப்பட்ட கஷ்டத்தைப் பார்ப்பதற்கா கடவுள் கண்ணை கொடுத்தார் இந்தக்கண் இருந்து என்ன பயன்?" என்று நினைத்தார். அவ்வளவுதான் மூன்றாவது வரமும் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது. பார்வை போய்விட்டது.

இந்தக் கதையில் ஒரு விடயம் கவனித்தீர்களா? வரம் வாங்கியும் அந்தப் பெரிய மனிதனுக்கு அது பயன் படவில்லை பார்த்தீர்களா? அதற்கு என்ன காரணம்? பொறாமை,சுய நலம், முன்கோபம் எல்லாம் தான் இந்த மூன்றும் இருந்தால் அடுத்தவர்கள் நல்லது செய்தாலும் அது நமக்கு நல்ல விதமாக உபயோகப்படாது.

இந்த மூன்று குணமும் உள்ள ஒரு பெரிய மனிதன் இருந்தார். அவர் சாகும் சமயத்தில் கடவுளை வேண்டினார். உடனே கடவுள் காட்சி கொடுத்து "உனது கடைசி ஆசை என்ன?" என்று கேட்டார். "நான் செத்த பின்பு போகுமிடத்தில் எல்லாம் எப்போதும் எனக்கு அருகில் சாராயம், மாமிசம்,பீடி,சுருட்டு எல்லாம் தடையில்லாமல் கிடைக்க வேண்டும் அது தான் ஆசை" என்றார். "சரி... அப்படியே கிடைக்கும்" என்று சொல்லி விட்டு கடவுள் போய் விட்டார். அதே மாதிரி எல்லாம் கிடைத்தது.

கொஞ்ச நாள் தொடர்ந்து அவற்றைச் சாப்பிட்டுக்கொண்டே இருந்தார். வேறு எந்த வேலையும் இல்லை சலிப்பு ஏற்பட்டது. அங்கே இருந்த ஒருவரைக் கூப்பிட்டு "என்ன சார் இடம் இது? பிடிக்கவேயில்லை" இங்கிருப்பதை விட பேசாமல் நரகத்திற்கே போய்விடலாம் என்றார்.

அதற்கு அவர் மெதுவாக இவரிடம் வந்து இப்போது நீங்கள் இருக்கும் இடமே நரகம் தான் என்று கூறி விட்டுப் போனார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தேர்தல் இவ்வாண்டு நடத்தப்படவேண்டுமாயின் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படவேண்டும்

## -அமைச்சர் டி.எம்.ஜெயரத்ன

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தல் 2007ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமளவிலேயே நடைபெறும் தற்போது அமுலில் உள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தின் படி அதற்கு முன்னர் தேர்தலை நடத்த முடியாது.

அப்படித் தேர்தலை நடத்த வேண்டுமாயின் அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்படவேண்டும் அதற்கு பொது ஜன ஐக்கிய முன்னணி தயார் ஐ.தே.கவின் தலைவர் தயாரா? என பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜெயரத்ன கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை இந்த வருடமே நடாத்த வேண்டும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் நடைபெற ஜனாதிபதி என ஐ.தே.க.வின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்திருந்த அறிவிப்புகள் குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐ.தே.க தலைவர் என்ன தான் கூப்பாடு போட்டாலும் இந்த வருடம் ஜனாதிபதித்தேர்தல் நடத்தப்படமாட்டாது ஜனாதிபதி தேர்தல் 2007ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலேயே நடைபெறும்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் அடுத்த வருடம் நவம்பர் மாதம் 17ஆம் திகதியுடன் முடிவடைகிறது. அதனை அடுத்து 3மாதத்திற்குப் பின்னரே தேர்தல் நடைபெறும்.

ஜனாதிபதி தேர்தலை மட்டுமல்ல, நிறைவேற்று அதிகாரங்களை கொண்ட ஜனாதிபதித் முறைமை மாற்றியமைக்கவும் நாம் தயாராக விருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# ஜே.வி.பிக்கு எதிரான முறைப்பாடுகள் விரைவில் விசாரணை செய்யப்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்தைவிட்டு ஜே.வி.பி வெளியேறிய பின்னர் சிறுபான்மை கட்சிகளுடன் இணைந்து முன்னோக்கிச் செல்ல முடிகின்றது. வருங்காலங்களில் தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் நெருங்கி செயற்படவுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் பேசும் போதே அவர் இவ்வாறுதெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணி அரசாங்கத்தை விட்டு ஜே.வி.பி வெளியேறியதை அடுத்து அந்த முன்னணியின் நான்கு அமைச்சர்களும் நான்கு பிரதி அமைச்சர்களும் தமது பதவிகளை இராஜினாமா செய்தனர்.

அவர்களின் பதவி வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும் அந்த பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் பிரதியமைச்சர்களிலிருந்தே அவற்றிக்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

தற்போதிருக்கும் அமைச்சர்களில் சிலர் செயற் படாதிருப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளதால் இந்த அமைச்சுக்களுக்கு பிரதி அமைச்சர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுபவர்.

தேசிய பிரச்சினை சம்பந்தமாக ஸ்ரீலங்கா சுதந் திர கட் சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளதால் இரு கட்சிகளும் ஒன்றிணைந்து நெடுநாட்களுக்குச் செயற்பட முடியாதென்பதை அறிந்தும் நான் இந்த கூட்டணிக்கு சம் மதிக்க காரணம் கட்சிகுள் இருந்த சிலர் விடுத்துவந்த அழுத்தமே.

அரசாங்கத்தை விட்டு ஜே.வி.பி விலகிய பின்னர் சிறுபான்மை கட்சிகளுடன் இணைந்து முன்னோக்கிச் செல்ல முடியுமாக இருப்பதால் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் வருங்காலத்தில் மிக நெருக்கமாகச் செயற்படவுள்ளோம்.

வெகுவிரைவில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மறுசீரமைக்கப்படும் ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 15 மாதங்கள் உள்ளதால் அது குறித்து யாரும் இப்போது குழம்பிக்கொள்ளத் தேவையில்லை அடுத்த வருட ஆரம்பத்தில் நடைபெறவுள்ள உள்ளூ ராட்சி தேர்தலுக்கு அனைவரும் தயாராக இருக்க வேண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் விரைவில் பெரும் மக்கள் தொகையுடன் மாபெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தவேண்டும்.

கடந்த அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு அவசரமாக தேர்தலுக்குச் செல்லுமாறு ஜே.வி.பியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்த சிலருமே அழுத்தங் கொடுத்தனர்.

ஜே.வி.பியின் உறுப்பினர்கள் அமைச்சர்களாக பதவி வகித்த போது அவர்கள் பற்றி எனகுகு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.விரைவில் அந்த முறைப்பாடுகள் பற்றி விசாரணை செய்யப்படுமெனவும் ஜனாதிபதி மேலும் கூறினார். (ற)

# உள்ளரங்க வேலைகளை ஆரம்பிக்க இணக்கம்; மருத்துவ பீட மாணவரின் போராட்டம் முடிவு

(யாழ்ப்பாணம்)

மருத்துவ பீடத்தின் உள்ளரங்க கட்டட வேலைகளை எதிர்வரும் ஓகஸ்ட் 3ஆம் கிழமைக்கு முன்பாக மீண்டும் ஆரம்பிப்பதாக துணைவேந்தர் வாக்குறிதி வழங்கியதையடுத்து நேற்று முன்தினம் மருத்துவபீட மாணவர்கள் மேற்கொண்ட எதிர்ப்புப்போராட்டம் சுமுகமான முறையில் முடிவுற்றது.

இவ்விடயம் தொடர்பில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், இன்றைய தினம் நடைபெற்ற மருத்துவபீட உள்ளரங்கம் தொடர்பான எதிர்ப்புப்போராட்டமானது சுமுகமான முறையில் முடிவுபெற்றது.இதன் இறுதியில் நடைபெற்ற துணைவேந்தருக்கும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்குமிடையிலான கலந்துரையாடலில் எமது கோரிக்கைகளுக்கு அமைவாக ஓகஸ்ட் 3ஆம் கிழமைக்கு முன் பாக உள்ளரங்க கட்டட வேலைகளை மீண்டும் ஆரம் பிப்பதாக வாய் மொழி மூலம் உறுதியளித்துள் ளார். பின்னர் இதனை எழுத்துவடிவம் மூலம் தருவதாகவும் உறுதியளித்துள்ளார்.

துணைவேந்தர் தகுந்த ஒப்பந்ததாரர்களை கேள்வி விண்ணப்பமுறையில் தெரிவு செய்து மீண்டும் கட்டடப்பணிகளை மிக விரைவில் மீள ஆரம்பிப்பதாக கூறியுள்ளார்.

அத்துடன், எமக்கு ஒதுக்கப்பட்ட நிதியானது மீணடும் திறைசேரிக்கு எக்காரணம் கொண்டும் திரும்பிச்செல்லாது எனவும் உறுதியளித்துள்ளார்.

இதற்குத் தமக்கு காலஅவகாசமாக ஓகஸ்ட் 3ஆம் கிழமை வரை தவணை வழங்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க,காலஅவகாசம் வழங்குவதாக அவருக்கு நாம் உறுதியளித்தோம்.

இதில் ஏதாவது எதிர்பாராத மாற்றங்கள் நிகழுமாயின் அது மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளின் ஆலோசனையுடனேயே நடைபெறும் எனவும் தெரிவித்தார்.

இறுதியாக நாம் இக் குறித்த தவணைப் பகுதியில் உள்ளக அரங்க கட்டடவேலைகளை மீண்டும ஆரம்பிக்காவிட்டால் நாம் மீண்டும் தொடர்ச்சியான பகிஷ்கரிப்புகளில் ஈடுபடுவோம் என்பதனையும் அவரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் வேலைநிறுத்தம் தொடர்கிறது

(கொழும்பு)

தமது கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வு கிடைக்கும் வரை வேலை நிறுத்தத்தை கைவிடப் போவதில்லை என்று அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமது கோரிக்கைகள் தொடர்பாக பேச்சு வார்த்தை நடைபெற்றுவருவதாக தொழிற்சங்க கூட்டமைப்பின் செயலாளர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கல்வி அமைச்சில் நடை பெற்ற பேச்சுவார்த்தையின் போது தமது கோரிக்கைகளுக்கு இணக்கம் காணப்படவில்லை என தெரிவித்த சாந்த பண்டார .

இந்த பேச்சுவார்த்தையின் போது பல்கலைக் கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்வதால் பல்கலைக்கழக நிர்வாக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# மோட்டார் சைக்கிள் இறக்குமதியில் மோசடி

(கொழும்பு)

போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களை இறக்குமதி செய்யும் மோசடி ஒன்றை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இவ்வாறு மோசடியான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்கள் களுபோவிலவில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கொழும்புக் கரையோர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதிப் பெரேரா தெரிவித்துள்ளார்.

போலி ஆவணங்களை சமர்ப்பித்துதுறை முகத்தில் இருந்து இந்த மோட்டார் கைக்கிள்கள் வெளியே கொண்டுவரப்பட்டிருப்பதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இலங்கை உற்பத்திப் பொருட்களுக்கு சர்வதேச தரச்சான்றிதழ் பெறத்திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளக்கூடிய தரச்சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்குரிய வேலைத் திட்டங்கள் உருவாக்கப்படும் என்று விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண பாராளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தர நிர்ணய சபையினூடாக தர நிர்ணயம் செய்யப்பட்ட போதிலும் அது சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சட்டமூலம் ஒன்று தொடர்பாக கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

தரநிர்ணய சபை அமைக்கப்பட்டதன் பின்னர் சர்வதேச தரநிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கை எடுக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எந்தவொரு கைத்தொழில் சாலையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கும் சர்வதேச அளவில் தரச்சான்றிதழை பெற்றுக் கொள்ள வாய்ப்புக்கிடைக்கும் என்று பேராசிரியர் மேலும் தெரிவித்தார்.

உரிய தரத்துடன் தயாரிக்கப்படாத பொருட்களை நிராகரிக்க ஐரோப்பிய சங்கம் தீர்மானித்துள்ளதாகவும், இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சர்வதேச சந்தையில் போட்டியிடக் கூடிய தரத்தில் தயாரிக்கப்படுவது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் தற்போது தயாரிக்கப்படும் பொருட்கள் உயர்தரத்துடன் காணப்பட்ட போதும் தரநிர்ணயம் தொடர்பான பிரச்சினை களைத் தோற்றுவித்து அதனை சர்வதேச சந்தையில் நிராகரிக்க முயற்சிகள் இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் பொருட்களுக்காக தர நிர்ணயம் தொடர்பான சபை அமைக்கப்படுவதன் மூலம் இந்த நிலைக்குத் தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சர்வதேச சந்தைக்கு அனுப்புவதில் இந்த சபை பெரும் பங்களிப்பை ஆற்றும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எத்தகைய குறைந்த விலைக்கு சர்வதேச சந்தைக்கு பொருட்களை அனுப்பிய போதிலும் வளர்ச்சியடைந்த நாடுகளின் பொருட்களுக்கே சர்வதேச சந்தையில் அதிக கேள்வி நிகழ்வதாகவும் அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.(அ-9)

## கச்சாய்ப் பிரதேச மக்களுக்கு உலர் உணவுகள் வழங்கப்பட்டன





(பலாலி)

யாழ். பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகத்தில் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.ரி. தென்கோனின் வழிகாட்டலின் கீழ் 521 ஆவது படையணியின் தளபதி லெப்ரினன் கேணல் ஏ.எல்.டி.எம். குணசேகரவின் ஒத்துழைப்புடன் கச்சாய்ப் பிரதேச வாழ் மக்களும் இராணுவத்தினரும் இணைந்து பொதுமக்கள் மற்றும் அப்பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள படையினரின் நலன் வேண்டியும் கச்சாய் சித்த பிள்ளையார் கோவிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விசேட பூசைகள் நடத்தப்பட்டதுடன், இந்த பூசைகளில் கலந்துகொண்ட பிரதேச மக்களுக்கு உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

இந்த விசேட நிகழ்வில் 521 ஆவது படையணித்தளபதி மற்றும் 11ஆவது கஜபாரெஜி மெண்ட் படையினரும், கச்சாய்ப்பிரதேச மக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த விசேட வழிபாடுகள் முடிவடைந்தவுடன்,11கஜபாபடை பிரிவின் கட்டளையிடும் அதிகாரி சுமார் 100 பேருக்கு உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகளை வழங்கினார். (ற)

## கடற்றொழில் உபகரணங்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் உள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலகத்தில் வைத்து நேற்று முன்தினம் மாலை நான்கு படகுகளும் தொழில் உபகரணங்களும் தாளையடி கடற்றொழிலாளர் சங்கத்தினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டின் மாநகர மேஜர் ஒருவரின் நிதியுதவியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சமாசத்தலைவர் தங்கவேலு தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றது. (ற)

# நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம் அமைத்தால் மின் கட்டணம் 40% குறையும்

(கொழும்பு)

உத்தேசிக்கப்பட்டுள்ள நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதன் மூலம் மின் கட்டணத்தை 40 வீதமாக குறைக்க முடியும் என்று இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் ரஞ்சித் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அடுத்த வருட ஆரம்பத்தில் நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என சிலாபத்தில் மின்சார சபை புதிய கிளை ஒன்றை திறந்து வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போது ரஞ்சித் பொன்சேகா இதனைத் தெரிவித்தார்.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டதும் முதல 3 கட்டங்களில் 300மெகா வேட் மின்சாரம் உற்பத்தி செய்து 900மெகா வேட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் ஓரளவு மின்சாரத்திற்கான உற்பத்திச் செலவை குறைக்க முடியும் என்றும் அடுத்த வருடத்தில் இந்தத்திட்டத்தின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் அது 4வருடங்களில் பூர்த்தி செய்யப்படலாம் என்றும் தெரிவித்துள்ளார். (அ-9)

## நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதும் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும்

(கொழும்பு)

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் சர்வதேசச் சட்டத்தின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நாட்டின் அரசாங்கத்தால் நிவாரணம் வழங்கப்படுவது அவசியமாகும் என்று அமைச்சர் டி.யு.குணசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை கம்யூனிசியக் கட்சியின் 62ஆவது வருடாந்த மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்ற சமயம் அதில் பங்கு பற்றி உரை நிகழ்த்துகையில் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

சர்வதேச சட்டத்திற்கு அமையவே சுனாமி நிவாரண சபையை ஜனாதிபதி அமைத்துள்ளார்.

இத்தகைய சபை ஒன்று அமைக்கப் படாவிட்டால் சர்வதேச சமூகத்தினர் நாட்டின் விவகாரங்களில் தலையிட்டிருக்க முடிந்திருக்கும் .

ஜனாதிபதியின் தொலைநோக்கின் காரணமாகவே நாட்டின் இறைமையும் பிரதேச தன்னாதிக்கமும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அபிவிருத்திக்கு இனப்பிரச்சினை முக்கிய தடையாக இருக்கின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

சுனாமி நிவாரண சபை மூலம் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதும் சமாதான முயற்சிகளும் முன்னெடுத்துச் செல்லப்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (அ-2)

# 80 சதவீத வீடமைப்புத் திட்டங்கள் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தியாகும்

## மனோதித்த வெல நம்பிக்கை

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்புத்திட்டங்களில் 80 வீதம் இவ்வருடம் டிசம்பர் மாதத்திற்குள் பூர்த்தி செய்ய பட்டுவிடும் என தேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான செயலணியின் தலைவர் மனோதித்தவெல தெரிவித்துள்ளார்.

இந்த இலக்கினை அடையும் பொருட்டு அதன் உடன் தொடர்புடைய சகலரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மனோதித்தவெல இதனைத் தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் பொருட்டு நியமிக்கப்பட்ட அனர்த்த நிவாரண முகாமைத்துவ செயலணியின் நோக்கங்கள் குறித்தும் இந்த மாநாட்டில் ஆராயப்பட்டது.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டு உதவிகள் தொடர்ந்தும் கிடைக்கப்பெற்று வருவதினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தொடர்ந்தும் உதவிகளை வழங்க முடியும் அதேவேளை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசும் அரசசார்பற்ற நிறுவனங்களும் வீடுகளை அமைத்தும் திருத்தியும் கொடுத்து வருகின்றன.

இவ்வருட இறுதிக்குள் வேலைத் திட்டங்களில் அநேகமானவை பூர்த்தியாக்கப்பட்டுவிடும் என எமக்கு பெரும் நம்பிக்கை உண்டு. எனவே அனைத்து விடயத்தில் மிக வேகமாகச் செயலாற்ற வேண்டியுள்ளது. 25ஆயிரம் வீடுகளை இலக்காகக் கொண்டு செயற்படுவதற்கு தியாக சிந்தை அவசியமாகும்.

குறிப்பாக மாவட்ட செயலாளர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் துரிதமாகச் செயற்படுவார்கள் என்று நம்புகின்றேன் என்றார்.(ற-8)

## புற்று நோய் சிகிச்சா சேவை

(யாழ்ப்பாணம்)

புற்றுநோய் வைத்திய நிபுணர் டாக்டர் என் ஜெயக்குமாரனின் சிகிச்சா சேவை யூலை முதலாம் திகதியில் இருந்து நடைபெறுவதாக சுகாதார சேவைகள், பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தகவல் தெரிவிக்கையில்,

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு பிரதி திங்கள், வெள்ளிக் கிழமைகளிலும் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் மாதாந்தம் முதலாவது புதன்கிழமையும் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் மாதாந்தம் இரண்டாவது புதன்கிழமையும்,கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மாதாந்தம்நான்காவது புதன் கிழமை இச் சேவை நடைபெறும் என த் தெரிவித்துள்ளார். (அ)

## தேர்த்திருவிழா

(கற்கோவளம்)

பருத்தித்துறை சிவன் கோவிலில் எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது. (அ-104)

## நிர்வாகிகள் தெரிவு

(கற்கோவளம்)

பருத்தித்துறை நகர கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும் கடந்த மாதம் 30ஆம் திகதி சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தலைவராக ஆவிக்னராஜாவும், உபதலைவராக தே.தேவராஜேந்திரனும், செயலாளராக அ. கேதீஸ்வரனும், உபசெயலாளராக் க. விஜயபாலனும், பொருளாளராக செ. உமாபதியும், நிர்வாக உறுப்பினர்களாக த. சுரேஸ்,ர.சாந்தி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-104)

## விளையாட்டு விழா

(இணுவில்)

ஏழாலைமத்தி சனசமூகத்தின் விளையாட்டு விழா இவ் வருடம் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் யாவும் சன சமூகத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

ஏழாலை மத்தி கண்ணகை அம்மன் ஆலய முன்றலில் அமைந்துள்ள விளையாட்டுத்திடலில் மேற்கொள்ளவும் சிறுவர்கள், இளைஞர்கள், பெரியவர்கள் எனப் பல்வேறு பிரிவுகளாக மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுக்காக இப்பகுதி எங்கும் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ற-122)

## தெரு நாய்கள் அழிப்பு

(சுதுமலை)

வலி கிழக்குப் பிரதேச சபையின் கீழ் உள்ள புத்தூர் கிழக்கு வாதரவத்தை போன்ற பகுதிகளில் மட்டும் கடந்த மாதம் 40ற்கும் அதிகமான தெரு நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புத்தூர் பகுதி பொதுச்சுகாதார பரிசோதகரும், வலி கிழக்குப் பிரதேச சபையின் உப அலுவலக சுகாதார தொழிலாளிகளும் இணைந்து நடாத்திய இவ் அழிவுப் பணியிலேயே இவ்வதிகமான நாய்கள் அழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இப் பகுதி மக்கள் பல நாட்களாக பொதுச் சுகாதார பரிசோதகருக்கு நாய்களின் தொல்லை தொடர்பாக முறைப்பாடுகள் கொடுத்து வந்ததையடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக் கப்படுகின்றது. (அ)

# ரயில் திருடர்களைப் பிடிக்க விசேட சுற்றிவளைப்பு

(கொழும்பு)

இரவு நேர ரயில்களில் பயணிக்கும் பயணிகளின் பெறுமதி மிக்க பொருட்களைக் களவாடும் திட்டமிட்ட குழுவை கைது செய்வதற்காக விசேட சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட இருப்பதாக ரயில்வே பாதுகாப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கான நாடளாவிய ரீதியில் சுற்றி வளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக அதன் அத்தியட்சகர் டபிள்யு.எஸ்· அத்தநாயக்க கூறியுள்ளார்.

தூர இடங்களுக்குச் செல்லும் இரவு நேர ரயில்களின் இரண்டாம் வகுப்பு மற்றும் படுக்கை வசதிகளுடன் கூடிய வகுப்புகளுக்குமிடையில் கொள்ளையர்கள் அங்குள்ள பொருட்களை கொள்ளையிட்டுச்செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு 10.30 மணியளவில் கொழும்பில் இருந்து திருகோணமலைக்குச் சென்று கொண்டிருந்த ரயிலில் கலாவெவப்பகுதியில் வைத்து கொள்ளையட முயன்ற ஒருவர் ரயில் பாதுகாவலர்களால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கிக்கடுவப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ-2)

# தமிழகப் பயணம்

பயணக் கட்டுரை

# தமிழ்ப் பண்பாட்டை நினைவுறுத்தும் கீழானூர்த் திண்ணை வீடு

என். விஜயன்

32 கீழானூரில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் போதிய விளக்கங்களை லேசான் இந்தியன் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. பிரதீப் வழங்கினார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அளித்த பதில்கள் காத்திரமானவையாக இருந்தன.

செய்தியாளர் மாநாட்டில் வைத்து மோர் தரப்பட்டது. பசுபதிச் செட்டியார் விவசாயப் பண்ணையாளர் என்பதைத் தரப்பட்ட மோர் உறுதி செய்தது. கீழானூரின் இயற்கை அழகைப் பார்ப்பதற்காக பசுபதிச் செட்டியாரின் வீட்டில் இருந்து வெளியே வந்தேன்.

பசுபதிச் செட்டியாரின் வீட்டிற்கு அடுத்தாற் போல் இருக்கும் வீட்டை நோட்டமிட்டேன்.

பண்டைக்காலத்து வீடு அது. வீட்டின் முன்பாகத் திண்ணை. வீதியால் பாகின்றவர்கள் களைத்துப் போனால் இளைப்பாறுவதற்காக அமைக்கப்பட்டதே அந்தத் திண்ணை. வீட்டின் கதவைத் தாளிட்டாலும் திண்ணையில் எவரும் வந்து ஓய்வெடுக்க முடியும்.

பார்ப்பதற்கு மிகவும் அழகாகவும்,




அற்புதமாகவும் இருந்தது.

தமிழர்களின் இல்வாழ்வுப் பண்பின் உயர்வை உயர்ந்த திண்ணைச் சுவர்கள் உறுதி செய்தன. ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்துக் கலாசாரத்திலும் திண்ணை வீடுகள் இடம்பிடித்திருந்தன. இன்று அவற்றின் எச்சங்கள் கூட இல்லாமல் போகுமளவிற்கு நாம் மாறிவிட்டோம் என்பது வேதனைக்குரியது.

தமிழகத்தில் திண்ணை வீடுகள் தற்போதும் பேணப்பட்டு வருவது தமிழர்களின் கலை கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்கும் பணி



லேசான் இந்திய நிறுவன நிர்வாக இயக்குநர், பொறியியலாளர் பிரதீப்

யென்றே கூறவேண்டும்.

## இங்கு போல் அங்கும்

பசுபதிச் செட்டியாரின் வீட்டிற்கு அருகில் உள்ள வீட்டின் திண்ணையில் நடுத்தர வயதுடைய ஒருவர் குந்தியிருந்தார். அவரோடு பேச வேண்டும் என்ற ஆவல் எனக்குள் ஏற்பட்டாலும் திண்ணையில் இருப்பவரிடம் பேசுவதற்கான அறிகுறிகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இருந்தும் சந்தர்ப்பத்தை நழுவ விடலாகாது என்ற முடிவை எனக்குள் உறுதியாக எடுத்துக் கொண்டேன்.

பொதுச் சுகாதாரப் பணியில் நான் ஈடுபட்டிருந்த காலத்தில் அப்போது யாழ். பிராந்திய சுகாதாரக் கல்வி அதிகாரியாக இருந்த இணுவில் கா.வைத்தீஸ்வரன் ஐயா அவர்கள் கற்பித்த பொதுசனத் தொடர்பு நுணுக்கம் எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. மெல்லிய புன்சிரிப்போடு திண்ணையில் இருந்தவரை அண்மித்துச் சென்றேன். ஐயா! என்ற அடைமொழியுடன் நீங்கள் இந்த இடம் தானா? பௌவ்யமாகக் கேட்டேன், ஆம் என்பது போல தலையாட்டினார்.

மனுசன் இறுக்கமான ஆள்போல என்று உள்ளூர நினைத்துக் கொண்டாலும், 'நான் சிலோனில் இருந்து வந்திருக்கிறேன்' குன்னக்குடி வைத்தியநாதனின் வயலின் இசை போல இழுத்தேன்.

அட! அதையாரும் கேட்டாங்களா! இப்படியொரு பதிலை அவரிடம் இருந்து எதிர்பார்த்த எனக்குத் திண்ணையில் அமருமாறு கையைக் காட்டினார். எனது அணுகு முறை வெற்றி அளித்து விட்டது என நினைத்தாலும், நீ எந்த இயக்கம் என இந்தாளும் கேட்டு விடுமோ என்ற பயம் என் இதயத்தின் அறைக் கதவுகளை வேகமாக அடிக்க வைத்தது.

ஒரு மாதிரியாக என்னைச் சுதாகரித்துக் கொண்டு நீங்கள் கணனிப் பயிற்சி நிலையத் திறப்புவிழாவுக்கு வரவில்லையா? என்று கேட்டேன். அழைப்புக் கிடைக்கவில்லையென்ற அவர் தானாகவே பேசத் தொடங்கினார்.


நான் தாங்க இந்தக் கிராமத்தின் தலைவர்... கூறிவிட்டு ஆழ்ந்த யோசனையில் மூழ்கிக்கொண்டார்.

ஓ... சங்கதி இதுவா ஒரு கிராமத்தின் தலைவருக்கு அழைப்பு விடாத தன் காரணமாகத் தான் அந்தாள் கடுப்போடு இருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டேன். யாழ்ப்பாணத்தானுக்குச் சொல்லிக் காட்டவா வேண்டும் ஆரம்பித்து விட்டேன்.

என்னவா இருந்தாலும் இந்தக் கிராமத்தின் தலைவருக்கு அழைப்பு விடாமல்... ஒரு போடு போட்டேன். இது சிலோனில் இருந்து வந்த உங்களுக்குத் தெரியுது ஆனா அவங்களுக்கு விளங்குதில்லையுங்க. அவரின் பதில் எனக்குத் திருப்தியாக இருந்தது. 'சிலோனில இருந்து மட்டுமல்ல எம்.ஆர்.ரி.சியில் இருந்தும் வந்திருக்கிறன். எவ்வளவு அனுபவம் இருக்கும் தெரியுமா? எனக்குள் பெருமைப்பட்டுக்கொண்டு சேட்கொலரை இழுத்து விடுவதுபோல உள்ளார்ந்தமாகப் பாவனை செய்தேன்.

அவருக்குச் சாதகமாகக் கதைத்ததனால் வெறுப்போடு இருந்த அவர் தணிந்து என்னோடு அளவளாவிப் பேசினார். பேச்சின் இடையே, பசுபதிச் செட்டியாரோடு உங்களின் உறவு எப்படி... மெல்லக்கேட்டேன். அவங்களோட நாங்க கதைக்கிறதில்லையிங்க.

அவரின் பதில் அழைப்பு விடாததற்கான காரணத்தைத் தெரிவிக்க




அவரிடம் விடைபெற்றுக் கொண்டு பசுபதிச் செட்டியாரின் வீட்டிற்குச் சென்றேன். செய்தியாளர்கள் அங்குமிங்குமாகக் கூடிநின்று கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

அச் சமயத்தில் லேசான் இந்திய நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர் ஒருவர் என்னிடம் The Power of Human Relations, Brand - Wise என்ற புத்தகங்களைத் தந்தார். காத்திரமான புத்தகங்கள், தரமான அச்சுப் பதிப்பு. The Power of Human Relations - விலை 295 இந்திய ரூபா. Brand - Wise விலை 225 இந்திய ரூபா. இரண்டு புத்தகங்களின் இலங்கைப் பெறுமதி 1300 ரூபாவாக இருக்கும். இதில் Brand - Wise என்ற புத்தகத்தை லேசான் இந்திய நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பிரதீப்புடன் ஜோதிமேனன் இணைந்து எழுதியிருந்தார்.

புத்தகங்களைப் பெற்றுக்கொண்ட அதே நேரம் புறப்படலாம் என்ற அழைப்போடு மினிபஸ்ஸில் ஏறிக் கொள்ள அதுவரை காத்திருந்த சாரதி தனது கோபத்தை மினிபஸ்ஸின் சத்தத்தின் மூலம் வெளிப்படுத்துவது போல உறுமியபடி பஸ்ஸை ஸ்ராட் செய்தார்.

(திங்கள் வளரும்)

---

## தேசியப் பிரச்சினை தீர்க்கப்படாததால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பாரிய தாக்கம்

### இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய பிரச்சினை தீர்க்கப்படாததன் காரணமாக நாட்டின் வலதுசாரிக கட்சிகளைப் போன்று தொழிலாளர்களுக்கும் முன்னேற்றமடைய முடியாத நிலையேற்பட்டுள்ளதாக சிறீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் டி.யு.குணசேகர தெரிவித்துள்ளார்.

சமாதான செயற்பாடுகளை ஒத்தி வைப்பதனால் நாட்டின் சமாதானத்தைப் போன்று ஜனநாயகத்திற்கும் பாரிய தடையேற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுனாமி நிவாரண சபையை ஏற்படுத்தாதிருந்தால் நாட்டின் இறைமை, ஒருமைப்பாடு என்பன பாதிக்கப்படுவதற்கு இடமேற்பட்டிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பொரளையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைமையில் மக்கள் விடுதலை முன்னணியின் செயற்பாடுகள், சுனாமி நிவாரண சபை என்பன குறித்து டி.யு.குணசேகர விரிவாக உரையாற்றியுள்ளார்.

(து-9)

## பொதுக்கட்டமைப்பை உடன் அமுல்படுத்த சர்வதேசம் அழுத்தம் கொடுக்க வலியுறுத்து

(கொழும்பு)

அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் கைச்சாத்திட்டுள்ள பொதுக்கட்டமைப்பின் நடைமுறைகளை உடனடியாக அமுல்செய்வதற்கு சர்வதேசம் அழுத்தம் கொடுக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக் காரியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் ஹரித்தாஸ் இலங்கை செடெக் நிறுவனத்தின் ஊடக அதிகாரி எஸ்.பி.அந்தோனிமுத்து இவ்வாறு வலியுறுத்தினார்.

ஆழிப்பேரலையின் பின்னரான 6 மாதங்களில் ஊடகங்கள் ஆற்றிய பங்களிப்பு சம்பந்தமாக ஆராயும் கூட்டம் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக் காரியாலயத்தின் ஊடகத்துறை அதிகாரி பீ.ஜோன்ஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிலையில், பொதுக்கட்டமைப்பின் நடைமுறைகளை முன்னெடுக்க சர்வதேச அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கைக்கு சர்வதேச உதவி நிறுவனங்களின் ஊடாக அதிகாரிகள் இணக்கம் தெரிவித்தனர்.

(ற-4)

### கே.சி.சி.சி.வெற்றிக் கிண்ணதுடுப்பாட்ட சுற்றுப்போட்டி

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்தும் கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத் துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை காலை 8.00 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் யங் ஸ்ரார் வி.க.எதிர் ஸ்கந்தாஸ்ரார் வி.கவும், பல்கலைக்கழக மைதானத்தில் கேசிசிசி. வி.க. எதிர் மானிப்பாய் பரிஸ் வி.கவும் மாலை 1.00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் பற்றீசியன வி.க. எதிர் கிறாஸ் கொப்பர்ஸ் வி.க.வும் பல்கலைக்கழக மைதானத்தில சென்றலைட்ஸ் வி.க.எதிர் ஓல்ட் கோட்ஸ் வி.க.வும் விளையாடவுள்ளன. (அ)

## முன்பள்ளி வர்த்தகம் சார்ந்த துறை அல்ல

(கொழும்பு)

முன்பள்ளி கல்வி முறையை ஒழுங்குபடுத் துவதற்காக விசேட கொள்கையொன்றைத் தயா ரிப்பது குறித்து மத்திய மாகாண சபை கவனம் செலுத்திவருவதாக மாகாண முதலமைச்சர் சரத் ஏக்க நாயக்கா தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாணத்தில் முன்பள்ளி நடவடிக் கைகள் யாவும் மாகாண அமைச்சின் மேற் பார்வையின் கீழ் நடைபெறவேண்டும் என்ற உத்தேச கொள்கை விளக்கத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளது என்றும்,

மத்திய மாகாணத்தில் தற்போது இயங்கிவரும் முன்பள்ளிகளில் அனேகமானவை வர்த்தக நோக்கில் நடைபெற்று வருவதாலேயே இது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்த முதலமைச்சர், சிறு குழந்தைகளின் பாடசாலைக் கல்விக்கு அடித்தளமிடுவதில் முன் பள்ளி கல்வித்துறை பெரும் பங்களிப்பு ஆற்று கின்றது என்றும் முன்பள்ளி என்பது வர்த்தக துறை சார்ந்த ஒன்றல்ல எனக் குறிப்பிட்டார். (ரு-9)

## 25,000 பேருக்கு வேலை வாய்ப்பு

(கொழும்பு)

அரச நிர்வாகத் துறையில் புதிதாக உரு வாக்கப்பட்டுள்ள பொது முகாமைத்துவ உதவி யாளர் சேவையில் இதுவரை 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் இணைந்து கொண் டுள்ளதாக பொதுநிர்வாக அமைச்சின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஜயபந்து தெ்ட்டி ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி தொடக்கம் அரச சேவையில் பொது முகாமைத்துவ உத வியாளர் சேவை அமுலுக்குக் கொண்டுவரப் பட்டது.

பொது எழுதுநர் சேவை, தட்டெழுத்தாளர் சேவை, சுருக்கெழுத்தாளர் சேவை, சிறாப்பர் சேவை, கணக்குப் பதிவுனர் சேவை, களஞ்சியக் காப் பாளர் சேவை அகிய சேவைகளை ஒன்றிணைத்து புதிய சேவை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

மாகாண அரச சேவையிலும் மத்திய அரசு சேவையிலும் பொது முகாமைத்துவ உதவியா ளர் சேவைக்கு உத்தியோகத்தர்களை உள் ளீர்ப்புச் செய்யும் நடவடிக்கைகள் தனித்தனி யாக இடம்பெற்று வருகின்றன.

பொது மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் புதிதாக உருவாக்கப் பட்ட இந்தச் சேவை வெற்றியளித்திருப்பதாக பொதுநிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது. (ரு-2)

## பேச்சுப் போட்டிகள்

(மருதங்கேணி)

தொண்டமனாறு மயில்வாகன சுவாமிகளின் 20ஆவது ஆண்டு குருபூசை தினத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரமத்தால் மாணவர்களி டையே பேச்சுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ள போட்டி களில் பிரிவு 1இல் தரம் 6-7 மாணவர்களும், பிரிவு 2இல் தரம் 8-9 மாணவர்களும், பிரிவு 3இல் தரம் 10-11 மாணவர்களும் பங்குபற்றமுடியும்.

பங்குபற்றும் மாணவர்கள் தாங்கள் கல்வி கற்கும் பாடசாலை, பிறந்த திகதி, பாடசாலை என்பன வற்றை அதிபர் மூலம் அல்லது பெற்றோர் மூலம் உறுதிப்படுத்தி நாளை மறுதினம் தபால் மூலமோ அல்லது நேரிலோ சந்நிதியான் ஆச்சிரமம், தொண டமனாறு என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க லாம்.

போட்டிகள் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும். இதில் வெற்றிபெற்றவர்களுக்கு அடுத்தமாதம் 11ஆம் திகதி வியாழக்கிழமை மயில்வாகன சுவாமிக ளின் குருபூசை தினத்தில் பணத்தொகை, பரி சில்கள், சான்றிதழ் என்பன வழங்கப்படும். அத் துடன் போட்டியில் பங்குபற்றும் அனைவருக்கும் ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-35)

## பரிசாரகர்களுக்கான பயிற்சி நெறி

(மருதங்கேணி)

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் கடந்த மூன்று மாதங்களாக நடைபெற்று வந்த பரிசாரகர்களுக்கான பயிற்சிநெறி, கடந்த வியா ழக்கிழமை முடிவுற்றதைத் தொடர்ந்து அடுத்த கட்டமாக யாழ்.மாவட்ட உத்தியோகத்தர்களை வைத்தியசாலை களில், பரிசாரகர்களாக கடமையாற்றும் 60 பேருக்கான பயிற்சி கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

இதை யாழ்.பிராந்திய பிரதி சுகாதார பணிப் பாளர் ஆ.கேதீஸ்வரன் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். (அ-35)

## மகா கும்பாபிஷேகம்

(மருதங்கேணி)

தென்புலோலி அருள்மிகு கணைப்பதி பைரவ சுவாமி கோவில் நூதன பிரதிஷ்டா மஹா கும்பா பிஷேகம் எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெற வுள்ளது.

'சிவாகம சித்தாந்த ஞானதேசிக பானு' சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணி தேசிகர் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடாத்தி வைக்கவுள்ளார். (அ-35)

# இந்தியாவிலுள்ள ஈழ அகதிகளை தாயகம் அழைத்துவர நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக இந்தியாவுக்குச் சென்ற ஈழ அகதிகளை தாயகத்துக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்த சூழ் நிலை காரணமாக ஆயிரக்கணக்கான தமிழ்க குடும்பங்கள் இந்தியாவுக்குச் சென்று தமிழ் நாட்டில் தங்கியுள்ளன. இவர்களை தாயகத் துக்கு மீண்டும் அழைத்து வருவதற்கான நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக் குமிடையில கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து பெருமளவான அகதிகள் பாதுகாப்பற்ற சட்டவிரோத படகுகள் மூலம் தாயகம் திரும்பியுள்ளனர்.

இவ்வாறு திரும்பும் அகதிகள் கடலில் மூழ்கி மரணமான சம்பவங்களும், படகோட்டிகள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப் பட்டு தடுத்துவைக்கப்படும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலைமையை அடுத்தே ஈழ அகதி களைக் கப்பல் மூலம் தாயகத்திற்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரு-8)

## கண்ணிவெடியற்ற நாட்டை உருவாக்குவோம்

## வவுனியா, மன்னாரில் விழிப்புணர்வு வாரம்

(வவுனியா)

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் மிதி வெடி செயற்பாட்டு வாரம் நேற்றுமுன்தினம் முதல் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

யுனிசெவ் அணுசரணையுடன் இந்தத் திட் டம் அமுல்செய்யப்பட்டு வருகின்றது. இந்தத் திட டம் எதிர்வரும் 10ஆம் திகதி நிறைவுபெறும் எனறு வவுனியா மாவட்ட யுனிசெவ் பிரதித் திட்ட அதிகாரி சட்டத்தரணி எஸ்.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

கண்ணிவெடியற்ற நாட்டை உருவாக்கும் நோக்குடன் வன்னிப் பிரதேசத்தில் இலட்சக் கணக்கில் புதைந்துள்ள மிதிவெடிகளை மீட்கும் மனிதாபிமான பணிகள் நடைபெற்று வருகின் றன என்றும்,

மிதிவெடியின் அபாயம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன ஒருவார காலம் வவுனியா, மன்னார் மாவட்ட மக்கள் மத்தி யில் அறிவூட்டல் நிகழ்வுகள் நடைபெறவுள்ளது என்றும்,

இறுதி நாளான 10ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வவுனியா காமினி மகாவித்தியாலய மண டபத்தில் மிதிவெடிகள் தொடர்பான கண்காட்சி யும் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரி வித்துள்ளனர். (அ-2)

## வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசி

மாநகரசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பு ஊசி 4ஆவது கட்டமாக கீழ்வரும் நிலையங்களில் வைத்து வழக்கப்படவுள்ளது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்கள் வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசி ஏற்றிக் கொள்ளுமாறு யாழ்மாநகரசபை சுகாதார வைத திய அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

எதிர்வரும் 12ஆம் திகதி கலைவாணி ச.ச.நிலை யம் ஓட்டுமடம் (8.00 -10.00 மணி), மூத்தவிநாய கா ச.ச.நிலையம் (10.30 - 12.30 மணி), திருநெல் வேலி சிவன்கோவில் முன்பாக (2.00-4.00 மணி).

எதிர்வரும் 13ஆம் திகதி சென் செபஸ்ரியர் ச.ச.நிலையம் குருநகர் (8.00 - 10.00 மணி), திரு நகர் படிப்பகம் இராஜசிங்கம் வீதி (10.30 - 12.30 மணி), தொடர்மாடி பாலர் பாடசாலை கடற்கரை வீதி குருநகர் (2.00 - 400 மணி).

எதிர்வரும் 14ஆம் திகதி யாழ்.சன்மார்க்க வாலிபர் சங்க ச.ச.நிலையம் பலாலி வீதி, பருத தித்துறை (8.00 - 10.00 மணி), திருவள்ளுவர் ச.ச.நிலையம் மடத்தடி, மடம் வீதி (10.30 - 12.30 மணி), மீனாட்சி அம்மன் கோவிலடி குடியிருப்புப் பகுதி கொட்டடி, யாழ்ப்பாணம் (2.00 - 4.00 மணி) தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. (அ)

## வாழும் கலைப் பயிற்சி பெற 47 பேர் இந்தியாவுக்கு!

(யாழ்ப்பாணம்)


வாழும் கலைப்பயிற்சி பெறுவதற்காக யாழ்.மாவட்டத்தில் இருந்து 47 பேர் தெரிவு செய்யப்பட்டு இந்து கலாசார அமைச்சினால் சென்ற மாதம் இந்தியா அனுப்பப்பட்டுளளனர்.

இவ் 47 பேரும் இந்தியாவில் திறமை வாய்ந்தவர்களிடம் வாழும் கலைப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

பயிற்சி பெற்று வருபவர்களின் ஒரு தொகு தியினர் பயிற்சியை முடித்துக்கொண்டு திரும்பி வரவுள்ளார்கள். இவ்வாறு பயிற்சியை முடித்து வருபவர்களுக்கு இந்து கலாசார அமைச்சினால் சானறிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தியா சென்று வாழும் கலைப் பயிற்சியை முடித்தவர்கள் யாழ்மாவட்டத்தில் பல பாகங்களில் வாழும் கலைப்பயிற்சியை வழங்கவுள்ளனர்.

இவ்வாறு வாழும் கலைப் பயிற்சியை வழங்கு பவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவை வழங்கு வதற்கு இந்து கலாசார அமைச்சு தீர்மானித் துள்ளது. (ரு-19)









பூமியிலிருந்து 13கோடி கிலோமீற்றர் தூரத்திற் கப்பால் இருந்த பாரிய வால்நட்சத்திரமொன்றை சாதாரண சலவை இயந்திரம் அளவான விண் கலம் மூலம் செக்கனுக்கு பத்து கிலோ மீற்றர் வேகத்தில் சென்று மோதித் துழைதது அப்பால் சென்ற வெற்றிகரமான சாதனை குறித்து நாசா விஞ்ஞானிகள் மகிழ்ச சிக்கடலில் மூழ்கியுள் ளார்கள். விண்ணில் ஏவப்பட்ட விண்கலத்தையும் பாரிய வால் நட்சத்திரத்தையும்; விண்கலம்-வால்நட்சத்திரத்தை மோதி துழைத்துச செல் வதையும் படங்களில் காணலாம்.

## மஹோற்சவம்

(மருதங்கேணி)

கரவணவாய் வடக்கு வாய்க்காற்தெரு மூத்த நயினார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

20ஆம் திகதி புதன்கிழமை காலை 8.00 மணிக்கு தேர்த்திருவிழாவும் 21ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் (அ-35)

* * *

(மருதங்கேணி)

அல்வாய் வேவிலநதை முத்துமாரியம்மன் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரமபமாகவுள்ளது. 20ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் 21ஆம் திகதி தர்த்தத் திரு விழாவும் இடம்பெறும். (அ-35)

* * *

(மருதங்கேணி)

கொக்குவில் கிழகது கோணாவளை ஒழுங்கை ஸ்ரீ சாயி துர்க்கா தேவி ஆலய வருடாந்த மஹோற் சவம் எதிர்வரும் 11ஆம திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறவுள் ளது. (அ-104)

* * *

(மருதங்கேணி)

அல்வாய் மாலிசந்தி பிள்ளையார் கோவில வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர் ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறும்.

16ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு தேர்த்திருவிழாவும், 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறும். (அ-35)

## சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வெள்ளிக் கிழமை தோறும் நடாத்திவரும் ஆன்மீக சொற் பொழிவு தொடரில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு "வாழ்த்தி வணங்குவோம்" என்னும் தலைப்பில் ஆசிரியர் இ.சண்முகசுந்தரம் ஆன்மீகச் சொற் பொழிவாற்றவுள்ளார். (அ-35)

## நிவாரண முத்திரைகள் 20% ஆல் குறைவு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவுள்ள புதிய நிவாரண முத்திரைகள விநியோகத்தின்போது 20% ஆல் அளவு குறைக கப்படவுள்ளன.

ஏற்கனவே 32 வாரங்களுக்கான நிவாரண முத்திரைகள் விநியோகிக்கப்பட்டு இவற்றுக் கான பணக் கொடுப்பனவுகள், பொருட்கள் வழங் கப்பட்டு முடியும் நிலையில் உள்ளன.

ஆனால், புதிய முத்திரைகள் மீண்டும் விநி யோகிக்கப்படும் போது 20% குறைத்தே வழங் கப்படவுள்ளன. இதன்படி திருகோணமலை மாவட் டத்தில் முன்னர் வழங்கப்பட்ட 1இலட்சத்து 10 ஆயிரம் முத்திரைகள் இம்முறை 88ஆயிரம் ஆகக் குறைக்கப்பட்டுள்ளன.

அரச உத்தியோகத்தர்கள், நிரந்தர வருமா னம் பெறுவோர், தனியார் துறை மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரிவோர் ஆகியோ ரின் முத்திரைகள் குறைக்கும் எண்ணிக்கையில் அடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரு-2)

## மட்டக்களப்புக்கு அமெரிக்கா உதவி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமியினால பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமெரிக்கா தொடர்ந் தும் பல்வேறு உதவிகளை மேற்கொண்டு வருகின்றது.

அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம் ஒரு கோடி 50 இலட்சம் ரூபா பெறுமதியான பாவ னைப்பொருட்களை காத்தானகுடி, மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் பாதிக் கப்பட்ட மக்களுக்கு வழங்கியுள்ளது.

ஒரு குடும்பத்திற்கு 2ஆயிரம் ரூபா பெறு மதியான பாவனைப்பொருட்கள் 7ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. (அ-9)

## தொடரும் காத்திருப்புகள்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் 14 நாள் காலக்கெடு தொடர்பில் இன்னும் அரசாங்கத தின் பதிலுக்காக காத்திருப்பதாக போர்நிறுதத கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

எனினும் தாம் இது தொடர்பில் பாதுகாப்புத் தரப்பினரின் பதிலுக்காக காத்திருப்பதாக அர சாங்க சமாதான செயலகத்தின் தலைவர் ஜெயநத தனபால தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப்புலிகள் தமது போராளிகளுக்கு உரிய பாதுகாப்பு கள் உறுதிப்படுத்தப்படவேண்டும் என்பதறகாக அரசாங்கத்திற்கு வழங்கியுள்ள காலகெடு முடிவதற்கு இன்னும் 6 நாட்கள் எஞ்சியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

# தோல்வியை வெற்றியாக்க முடியும்!



எல்லோரும் விரும்புவது வெற்றியைத் தான். ஆனால் எல்லோரும் வெற்றி பெறுவது என்பது கடினமே என்று பலர் நினைப்பதுண்டு. இது தவறு. முயன்றால் முடியாதது எதுவும் இல்லை.

மிகக் கடுமையாக உழைப்பவர்கள் கூட சில நேரங்களில் தோல்வியை சந்திக்க நேரிடும. தோல்விகள் - இழப்புகளைச் சந்திக்க நேர்ந்தால் துவண்டு விடுபவர்கள் இருக்கத் தான் செய்கிறார்கள்.

தோல்வி ஏற்பட்டால், இனி அவ்வளவு தான் என்று மூலையில் முடங்கிப்போய் விடுபவர்களும் உண்டு. 'என்ன செய்வது வாழ்க்கையே போராட்டமாகி விட்டது' என்று புலம்புபவர்களும் இருக்கிறார்கள்.

இனி புலம்பல் வேண்டாம். தோல்வியைக் கண்டு முடங்கிப் போக வேண்டாம். மனம் தளர வேண்டாம். நண்பர்களே, தோல்விகளையும் வெற்றியாக்க முடியும்.

என்னது நிஜமா! அது எப்படி? என்கிறீர்களா? இதோ தோல்வியை வெற்றியாக்கும் தாரக மந்திரங்கள்:

### காரணத்தை ஆராயுங்கள்

தோல்விகள் அனைவருக்கும சகஜமே. மனிதர்களில் வெற்றியை மடடும் ருசித்தவர் யாரும் இல்லை. எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் பண பலம், ஆள் பலம் உள்ளவராக இருந்தாலும் அவருக்கும் ஏதாவது ஒரு இடத்தில் தோல்வி, ஏமாற்றம் இருந்திருக்கும். வாழ்க்கைப் பயணத்தில் வெற்றி - தோல்வி இருக்கும். எனவே தோல்வி ஏற்பட்டால் அதற்காக துவண்டுவிடக் கூடாது. வேகமாக அதில இருந்து மீளுவது எப்படி என்று யோசிக்க வேண்டும்.

தோல்விக்கான காரணம் என்ன என்று தீவிரமாக யோசிக்க வேண்டும். எங்கே தவறு நடந்துள்ளது என்பதைக் கண்டுபிடித்து, தோல்வயை வெற்றியாக மாற்றுவதற்கான வழிகளை உருவாக்க வேண்டும்.

### அனுபவத்தைக் கற்றுக் கொள்ளுங்கள்

தோல்வியை ஒரு பாடமாக, அனுபவமாக எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு தடவை தோல்வி ஏற்பட்டது என்பதற்காக அந்தச் செயலை விட்டு ஒதுங்குவது தவறு. தோல்விக்கான காரணம் என்ன என்பதை அறிந்து இனி அதை வெற்றியாக மாற்றுவதற்கு என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்பதைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள். இதற்கு ஏற்ப வெற்றி 'பார்முலா' ஒன்றை உருவாக்கி அதை செயல்படுத்துங்கள்.

எதிர்கால வெற்றியை இலக்காக வைத்து உழைத்தால் தோல்விகள் தோற்றுப் போகும், வெற்றி தேவதை வந்து மாலையிடும்.

### தகுதியை வளர்த்துக் கொள்ளுங்கள்

வெற்றி வந்ததும் ஆர்ப்பாட்டம் செய்து மகிழ்வதும், தோல்வி ஏற்பட்டதும் துவண்டு விடவும் கூடாது. வெற்றி - தோல்வியை சமமாக எடுத்துக்கொண்டு அதை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தோல்விக்குக் காரணம் உங்களது செயற்பாடாகவும் இருக்கலாம். கல்வி, அனுபவம், அணுகுமுறை, செயல்பாட்டில் வேகம் குறைவு போன்றவை காரணமாகவும் தோல்வி ஏறபட்டு இருக்கலாம். எனவே உங்களிடம் உள்ள குறைகளைப் போக்கி வெற்றி வரும் வகையில் தகுதிகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

### குருட்டு நம்பிக்கை வேண்டாமே

தொடர்ந்து உங்களைத் தேடி வெற்றி வருகிறது என்பதற்காக உங்கள் செயல்பாடுகள், திட்டங்களை ஆராயாமல் இருக்கக் கூடாது. உங்களது செயல்பாடுகள், உழைப்பு மீது குருட்டு நம்பிக்கைகள் கொள்ள வேண்டாம்.

ஒவ்வொரு முறையும் உங்கள் திட்டங்களை நன்கு ஆராய்ந்து பாருங்கள். தற்போதைய கால சூழ்நிலைக்கு ஏற்ப திட்டங்கள், செயல்பாடுகளில் மாற்றம் தேவையா? என்று யோசித்து முடிவு எடுங்கள்.

### பாடம் கற்றுக்கொள்ளுங்கள்

தோல்வியில் இருந்து பாடங்களை கற்றுக் கொள்ள மறக்க வேண்டாம். தோல்விக்கான காரணங்களை அலசி ஆராயும் போது நடுநிலையுடன் செயல்படுங்கள். உங்கள் மீதும், உங்களின் செயல்பாடுகளிலும், திட்டத்திலும ஏதேனும குறைபாடு இருந்தால் அதை மறைக்காமல ஒப்புக் கொள்ளுங்கள்.

தோல்விகளை அனுபவமாக எடுத்துக் கொண்டு அதில் இருந்து பாடம் கற்றுக்கொள்ள தயங்க வேண்டாம். ஒருமுறை செய்த தவறை மீண்டும் செய்யக்கூடாது என்பதில் உறுதியாக இருப்பது அவசியம்.

### திட்டமிடல் அவசியம்

எந்தச் செயலைச் செய்வதாக இருந்தாலும் அதற்கு முன்பு திட்டமிடுவது அவசியம்.

தனது பலம் என்ன?, பலவீனம் என்ன? என்பதை தயக்கமின்றி பட்டியலிடுங்கள். அந்தப் பட்டியல் உண்மையாக இருக்க வேண்டியது அவசியம். அதாவது பலவீனங்கள், குறைகளை தயக்கமின்றி குறிப்பிட்டு அதைப் போக்குவது எப்படி என்று ஆராய்ந்து பாருங்கள்.

பலம், பலவீனங்களுக்கு ஏற்ப திட்டமிட்டு, தேவைப்பாட்டால் மற்றவர்களின் ஆலோசனை, உதவியைப் பெற்றாவது வெற்றிபெறக் கடினமாக உழைக்கவேண்டும்.

இவை அனைத்தும் வெற்றிகளை உங்களுக்குச் சொந்தமாக்கும்.

# இரத்தச் சோகையா?




கீரைகள், காய்கறிகள், வெங்காயம், உருளைக்கிழங்கு, பேரீட்சை, வெல்லம் ஆகியவற்றில் இரும்புச் சத்து நிறைந்துள்ளது. பழங்கள், கீரைகள், இலைகள் ஆகியவற்றில் போலிக் அமிலச்சத்தும் கிடைக்கிறது. பருப்புகள், சோயாபீன்ஸ், கடலை, கொத்துக்கடலை, பால், பால்பொருட்கள் ஆகியவற்றில் புரதச்சத்துக் கிடைக்கும்.

அசைவ உணவைச் சப்பிடுவோர் முட்டை, இறைச்சி, ஈரல் ஆகியவற்றைச் சாப்பிட்டு இரும்புச்சத்தைப் பெறலாம். இரும்புச் சட்டியில் உணவுப் பொருட்களைத் தயார் செய்தாலும் இரும்புச் சத்து கிடைக்கும். வெல்லம், பேரீச்சம்பழம், தேன், வேர்க்கடலை, முருங்கைக் கீரை முதலியவற்றைத் தொடர்ந்து சாப்பிடவேண்டும்.

துடற்புழு நீக்கம் செய்துகொள்வது, மருத்துவர் பரிந்துரை செய்யும் போலிக் அமிலமாத்திரைகளைத் தொடர்ந்து உட்கொண்டு வந்தால் இரத்தச் சோகையைத் தவிர்க்கலாம்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல-67



*அனுப்ப வேண்டிய முகவரி-*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 67**
**'வலம்புரி - சங்குநாதம்'**
**இல:-03, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

முழுப் பெயர் :- ....................................................

முகவரி :- ....................................................

....................................................

....................................................

இங்கே வெட்டுக ------------------------------------ ✂

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

## இடமிருந்து வலம்

(1)அரவாணிகளின் கடவுள். (4)அதிகம் சாப்பிடுபவர்களை இப்படிச் சொல்வதுண்டு (குழம்பி வருகிறது). (6)காஞ்சிபுரம் இதற்குப் பெயர்போன ஊர் (குழம்பி வருகிறது). (8)ஒரு சிற்றுண்டி (வ.இ). (9)இறப்பதை இப்படியும் சொல்வார்கள் (திரும்பியுள்ளது). (11)மீனவர்களிடம் இருக்கும். (12)ரயில்கள் ஓட இது தேவை (திரும்பி வருகிறது).

## மேலிருந்து கீழ்

(1)அழுகிய முட்டையை இப்படிச் சொல்வார்கள். (2)அந்தக் காலத்துத் தாய்மார்கள் குழந்தையை தூங்கவைக்கப் பாடும் பாடல். (3)இலங்கையின் ஒரு மாவட்டம். (4)இது இருந்தால்தான் யாழ்மட்ட முடியும் (கீ.மே). (5)முதற் புத்திரன் (கீ.மே). (7)நவமணிகளில் ஒன்று. (9)நஷ்டமடைதலை இப்படிச் சொல்வார்கள் (குழம்பி வருகிறது). (10)இது ஓட அச்சாணி தேவை என்பார்கள் (குழம்பி வருகிறது).

### குறுக்கெழுத்துப் போட்டி இல.65 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1.கண்ணதாசன் 4.கும்மி 6.தீக்குண்டம் 7.மடம் 10.பில்கேட்ஸ்.

**மேலிருந்து கீழ்**

1.கச்சதீவு 2.தாதி 3.பாகு 4.குடம் 5.மம்மி 8.மடல் 9.கேது.

### பரிசு பெற்றோர் பெயர் விபரம்

**முதற் பரிசு** :- K.நந்தினி, முத்தெட்டு மடலேன், கோண்டாவில்.

**இரண்டாம் பரிசு** :- T.தரன், சுதுமலை வடக்கு, சுதுமலை.

**மூன்றாம் பரிசு** :- என்.ஜே.இரத்தினதயா, ஏழாலை வடக்கு, ஏழாலை.

### போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

க.ஞானோதயன், தெல்லிப்பளை. கே.ஏ.வரன், புத்தூர். T.S.சயந்தன், வட்டுக்கோட்டை. வே.குமாரசுவாமி, கரவெட்டி. ம.சர்மினி, கோண்டாவில் உ.நிஷா, கோண்டாவில், M.ருதாங்கன், அராலி, S.பிரணவன், மானிப்பாய். அ.ராஜா, யாழ்ப்பாணம். ச.கஜசங்கவி, உடுவில். சி.பிரியதர்சினி, மானிப்பாய். T.ஜெரின், குருநகர். S.றொசாரி, மானிப்பாய். லோ.வித்தியா, சண்டிலிப்பாய். T.யுகந்தினி, யாழ்ப்பாணம். து.பரதீபன், சாவகச்சேரி. து.நக்கீரன், மல்லாகம். ம.ஜனா, இணுவில். S.நித்தியா, கொக்குவில்.

# 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி; இலண்டனில் நடாத்துவதற்கு முடிவு

(சிங்கப்பூர்)

2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்கு 5 நாடுகள் விரும்பின. இதற்காக கடும் போட்டா போட்டி நடந்தது. இதில இங்கிலாந்து வெற்றி பெற்றது. 2012 ஒலிம்பிக் பந்தயம் இலண்டனில் நடத்தப்படும் என்று இறுதியாக சர்வதேச ஒலிம்பிக் சங்கம் நேற்றுமுன் தினம் அறிவித்தது.

பிரான்ஸ் -பாரீஸ் நகரிலும், அமெரிக்கா -நியூயோர்க் நகரிலும், ரஷ்யா -மொஸ்கோ நகரிலும், இங்கிலாந்து -இலண்டன் நகரிலும், இத்தாலி-மாட்ரிட் நகரிலும் 2012 ஒலிம்பிக் பந்தயத்தை நடாத்த விரும்புவதாக அறிவித்தன.



முடிவு அறிவிக்கபபடடதும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்யும் இங்கிலாந்து விளையாட்டு ரசிகர்கள்.

இதுபற்றி முடிவு செய்ய சிங்கப்பூரில் 117வது சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி கருத்தரங்கு கடந்த 3நாட்களாக நடைபெற்று வந்தது. இதில் பல்வேறு நாட்டு அரசியல் தலைவர்களும், விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும், முன்னாள் சாம்பியன்களும் கலந்துகொண்டனர்.

இலண்டனில்தான் 2012 ஒலிம்பிக்கை நடத்தவேண்டும் என்று இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளேயர் வலியுறுத்தி இந்த கருத்தரங்கில் பேசினார். அவர் 12பேர் கொண்ட குழுவுடன வந்து சிங்கப்பூரில் கடந்த 3நாட்களாக் முகாமிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிககாவில்தான் 2012 ஒலிம்பிக்கை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று முன்தினம் அந்தக் கருத்தரங்கில் முன்னாள் ஜனாதிபதி கிளிண்டனுடைய மனைவியும், நியூயோர்க் செனட்டருமான ஹிலாரி பேசினார். என்னென்ன காரணங்களால் நியூயோர்ககில் 2012 ஒலிம்பிக் நடத்தப்பட வேண்டும், அதற்கு நாங்கள் என்னென்ன வசதி வாய்ப்புகளை செய்து தருவோம் என்று விளக்கி அவர் பேசினார்.


இதுபோன்று பிரான்ஸ் அதிபர் ஜாக்குஸ் சிராக் தலைமையில் ஒரு குழு இந்தக் கருத்தரங்குக்கு வந்தது.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் இந்தக் கருத்தரங்கில் பேசினார். வழக்கமாக பொது நிகழ்ச்சிகளில் கூட ரஷ்ய மொழியில் பேசக்கூடிய அவர் நேற்றுமுன்தினம் முதல் தடவையாக ஆங்கிலத்தில் பேசி, எங்களுக்கு 2012ஒலிம்பிக் போட்டியை நடத்துகிற அனுமதியைத் தரவேண்டும் என்று வலியுறுத்தினார்.

பாரீஸ் நகர மேயர் பெர்ட்டிரன்டு டெலானோ பேசுகையில், நாங்கள் 1992, 2008 ஒலிம்பிக் போட்டியை பாரீஸ நகரில் நடத்த முயற்சி எடுத்தோம். அது நிறைவேற வில்லை. கடந்த 20 ஆண்டுகளாக முயற்சித்து வருகிறோம. எனவே 2012 ஒலிம்பிக்கை யாவது எங்களுக்குத் தர வேண்டும என்று உருக்கமாக கோரிக்கை முன்வைத்தார்.

இறுதியாக இலண்டன்-பாரீஸ் இடையே கடும் போட்டி நிலவியது. முதல் 3 சுற்றுகளில் மொஸ்கோ, நியூயோர்க், மாட்ரிக் ஆகியவை தோற்று போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டன. 4வது சுற்று வாக்கெடுப்பில் இலண்டன் வெற்றி பெற்றது. ஐ.ஓ.சி தனது ஓட்டை இலண்டனுக்குப் போட்டது. ஒலிம்பிக் வரலாற்றில் இதற்கு முன இப்படி நடந்தது இல்லை. ஐ.ஓ.சி தனது ஓட்டை வழங்கியதன் மூலம் இலண்டன இப்போட்டியில் வெற்றி பெற்றது.

இலண்டனுக்கு 54ஓட்டுகளும், பாரீஸுக்கு 50 ஓட்டுகளும் கிடைத்தன. இங்கிலாந்து பிரதமர் ரொனிபிளேயர் 3 நாட்களுக்கு முன்பு சிங்கப்பூர் வந்தார். ஐ.ஓ.சி உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களை சரிக்கட்டி இலண்டனுக்கு ஆதரவாக ஓட்டுப்போட வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)



இங்கிலாந்து மைதானத்தின் அமைவிடம்



சீனாவில் மிருகக்காட்சிச்சாலையில் வளரும் பண்டா கரடிக்காக பனிக்கட்டிகளால் ஆன சிறப்பு அறை ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.

சீனாவில் தற்போது கடும் கோடை நிலவுகிறது. அங்குள்ள ப்யூஜியன் மாகாணத்தில் உள்ள ஒரு மிருகக்காட்சிச்சாலையில் வளரும் பண்டா கரடிக்காக பனிக்கட்டிகளால் ஆன சிறப்பு அறை ஏற்படுத்தப பட்டு இருக்கிறது. இந்த வகைக் கரடிகள் குளிர்ப்பிரதேசத்தில் வாழ்பவை என்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுளளது.

# நைல் நதியில் பஸ் கவிழ்ந்தது 21 பேர் பலி; 24 பேர் படுகாயம்

(அடிஸ் அபாபா)

எத்தியோப்பியா நாட்டின் வடக்கு பகுதியில உள்ள கோண்டர் நகரில் இருந்து அடிஸ் அபாபா நகர் நோக்கி ஒரு சுற்றுலாப் பயணிகள் பஸ் சென்றுகொண்டு இருந்தது. பஸ்சில் 56 பயணிகள் பயணம் செய்தனர்.

இந்தப் பாதை மலைப்பகுதியான இடமாகும். இங்குதான் நைல் நதியின் கிளை நதியான புளூநைல் ஓடுகிறது.

இந்தப் பாதையில் பஸ் சென்று கொண்டு இருந்த போது திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் மலைப் பாதையில் இருந்து நைல்நதி ஓடும் 50 மீற்றர் பள்ளத்தில் பஸ் கவிழ்நது மூழ்கியது.

இந்தக் கோர விபத்து பல்க் லிக் என்ற இடத்தில் நடந்தது. இதில் பஸ்சில பயணம் செய்த 21 பேர் பலியானார்கள். 24பேர படுகாயம் அடைந்தனர். காயம் அடைந்தவர்கள் அடிஸ் அபாபா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ற)

WORLD NEWS உலக தரிசனம்

# 'வால் நட்சத்திரத்தைச் சேதப்படுத்தியதால் 1400 கோடி ரூபா நஷ்டஈடு தரவேண்டும்'

## 'நாசா' மீது ரஷ்யப் பெண் வழக்கு

(மொஸ்கோ)

பூமியில் இருந்து 13 கோடி கிலோ மீற்றர் தூரத்தில் வான்வெளியில் டெம்பல் - 1 என்ற வால் நட்சத்திரம் உள்ளது.

இந்த வால் நட்சத்திரத்தை நோக்கி அமெரிக்காவின் விண்வெளி நிறுவனம் 'நாசா' டீப் இம்பாக்ட் என்ற விண்கலத்தை செலுத்தியது. அதில் இருந்த குட்டி ராக்கெட் இம்பாக்டை வால் நட்சத்திரத்தின் மீது பயங்கரமாக மோதச் செய்து அமெரிக்கா சோதனை நடத்தியது.

327 கிலோ எடை உள்ள இந்த 'இம்பாக்டர்' கலம் கடந்த திங்கட்கிழமை 37 ஆயிரம் கிலோ மீற்றர் வேகத்தில் மோதியதல் அந்த வால் நட்சத்திரத்தில் இருந்து தூசு மண்டலம் கிளம்பியது. அதை ஒரு கமெரா படம் எடுத்து அனுப்பியது.

இந்த ஆராய்ச்சிக்காக அமெரிக்காவுக்கு ரூ.1600 கோடி செலவானது. அமெரிக்க நிறுவனம் நடத்திய இந்த சோதனைக்கு எதிர்ப்பு தெரிவித்து ரஷ்யாவைச் சேர்ந்த ஒரு பெண் மொஸ்கோ கோர்ட்டில் வழக்குத் தொடுத்துள்ளார்.

மரியா பே என்ற இந்தப் பெண் ஒரு ஜோதிடர். மொஸ்கோ கோர்ட்டில் அந்தப் பெண் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது,

டெம்பல் - 1 வால் நட்சத்திரம் மீது அமெரிக்க ராக்கெட் இம்பாக்டர் மோதியதால் வால் நட்சத்திரம் சேதம் அடைந்திருக்க வாய்ப்புள்ளது. அதன் சுற்றுப் பாதையிலும் மாற்றம் ஏற்பட்டு பூமிக்கு ஆபத்து ஏறபடவும் வாய்ப்புள்ளது. எந்தவொரு ஆபத்தும் ஏற்படாது என்று 'நாசா' நிறுவனம் ஆதாரபூர்வமாக நிரூபிக்கவில்லை.

விண்கலம் வால் நட்சத்திரம் மீது மோதியதால் எனது கிரகநிலை மாறுபடும் வாய்ப்புள்ளது. எனது வாழ்க்கைக்கும் பொது மக்கள வாழக்கைக்கும் இடையூறு ஏற்படலாம். இதனால் 'நாசா' நிறுவனம் ரூ.1400 கோடி நஷ்டஈடு வழங்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் அந்தப் பெண் ஜோதிடம் கூறியிருக்கிறார்.

இந்த மனு மீது மொஸ்கோ கோர்ட்டில் விசாரணை தொடங்கி இருக்கிறது.

வால் நட்சத்திரம் மீது விண்கலம் மோதியதால் வால் நட்சத்திரத்தில் எந்த மாறுதலும் ஏற்படாது. இது மலை மீது கொசு மோதியதற்குச் சமம் என்று 'நாசா' கூறியுள்ளது.

இன்னும் ஒரு மாதத்தில் இந்தப் பரபரப்பான வழக்கின் தீர்ப்பு கூறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ற)

# முஷாரப்புடன் மறைமுக உடன்பாடா?

(இஸ்லாமாபாத்)

## நவாஸ் மறுப்பு

பாகிஸ்தான அதிபர் பர்வேஷ் முஷாரப்புடன் மறைமுகமாக எந்த உடன்பாடும் மேற்கொள்ளவில்லை என பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.


பாகிஸ்தான் பிரதமராக இருந்த நவாஸ் ஷெரீப்பின் ஆட்சியை இராணுவ புரட்சி மூலம் கைப்பற்றினார் முஷாரப். நவாஸ் மீது கொலை சதி, ஊழல் உள்ளிட்ட ஏராளமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

உலக நாடுகளின் கண்டனக் குரல் அதிகரித்ததால் நவாஸை நாட்டைவிட்டு வெளியேற்றினார் முஷாரப். தற்போது சவுதி அரேபியாவில் அரசியல் தஞ்சம் புகுந்துள்ளார் நவாஸ் ஷெரீப்.

இதற்கிடையே பாகிஸ்தான் அதிபர் முஷாரப், சவுதி அரேபியா பயணம் மேற்கொள்ள இருக்கிறார்.

இது குறித்து நவாஸ் ஷெரீப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது,

சவுதி பயணம மேற்கொள்ள உள்ள முஷாரப், சவுதி அரசுடன் என்னைப் பற்றி என்ன பேசப்போகிறார் என்பது தெரியவில்லை. மீண்டும நான் பாகிஸதான் செல்வதற்காக முஷாரப்புடன் எந்த உடனபடிக்கையும் மேற கொள்ளவில்லை. அப்படி நான் உடன்பாடு மேற்கொணடால், கடந்த ஆறு ஆண்டுகளாக ஜனநாயகம் கோரி போராடிவருவதற்கு அர்த்தமில்லாமல் போய்விடும்.



பாஸ்போர்ட் வேண்டி விண்ணப்பம செய்திருக்கிறேன். இதை வைத்து சில பத்திரிகைகள் நான் முஷாரப்புடன் மறைமுக உடன்பாடு செய்து கொண்டதாக கற்பனை செய்திகளை வெளியிட்டுள்ளன. இவ்வாறு நவாஸ் ஷெரீப் கூறினார். (ற)

# பறவைகளை விரட்ட புதிய கருவி

(பீஜிங்)

விமான நிலையங்களில் பறக்கும் பறவைகளை விரட்ட சீன விஞ்ஞானிகள் புதிய கருவியை உருவாக்கியுள்ளனர்.

விமான நிலையங்கள் அருகே பறக்கும் பறவைகள் விமானத்தின் முன்புற விசிறியில் சிக்கி விபத்துக்குக் காரணமாகின்றன. இதற்காகவே விமான நிலையங்கள் அருகே அதிக மரங்கள் வளர்ப்பது தடுக்கப்படுகிறது.

இருப்பினும் சில காட்டுப் பறவைகள் வழி தவறி விமான நிலையத்தில வந்து உட்கார்ந்து கொண்டு விமானங்களுக்கு சங்கடததை ஏற்படுத்துகின்றன.

விமான நிலையத்தருகே வந்து அமரும பறவைகளைச் சுட்டுப் பிடிப்பது அல்லது வெடிச்சத்தத்தை உருவாக்கி பறவைகளை விரட்டுவது போன்ற முறைகளை சீனா கையாண்டு வந்தது. ஆனால் இந்த முயற்சி பெரிய பலனைத் தரவில்லை.

பறவைகள் அபாயத்தில் சிக்கி அபயக்குரல் எழுப்பும் கருவியை அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்து அதையும் பயன்படுத்திப் பார்த்தது சீனா. ஆனால் இந்தக் கருவிக்கும் பறவைகள் மசியவில்லை.

காரணம் அமெரிக்க நாட்டுப் பறவைகளின் அபயக்குரல் மொழி சீனப் பறவைகளுக்கு புரியாததுதான் காரணம்.

தற்போது சீன நாட்டுப் பறவைகள் அபயக் குரல் எழுப்புவதைப் போன்ற கருவியை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

பளிச்சிடும் ஒளியை உருவாக்கி அந்த அபயக்குரல் கருவியை அலறவிடும்போது விமான நிலையத்தருகே சுற்றிப் பறநத பறவைகள் மறுபடியும் அந்தப் பக்கம் தலை காட்டவில்லை.

இந்தத் திட்டம் நல்ல பலனை அளித்துள்ளதால், அனைத்து விமான நிலையங்களிலும் இந்தக் கருவியைப் பயன்படுத்த சீனா முடிவு செய்துள்ளது. (ற)

# வறுமையின் பிடியில் 2 கோடி சீனர்கள்

(பீஜிங்)

உலகிலேயே மிகவேகமாக வளரும் பொருளாதார நாடாக சீனா இருந்த போதிலும் கிராமப் புறங்களில் வசிககும் 2 கோடியே 60 இலட்சம் சீனர்கள் வறுமையில் வாழ்கிறாாகள்.

அவர்களின் ஆண்டு வருமானம் 4 ஆயிரம ரூபாய் மட்டுமே எனறு சீன மந்திரி ஒருவர் கூறியிருக்கிறார்.

உழவர்களில் 5 கோடிப் பேர் மிகக் குறைந்த வருமானம் உடையவர்களாக இருக்கிறார்கள் என்றும் அவர் கூறினார். ஏழை பணக்காரர்கள் இடையே ஏற்பட்டுள்ள இடைவெளியும், ஊழலும் சீனாவில் அடிக்கடி கலவரம் ஏற்படக் காரணமாக உள்ளன.

சீனாவின 130 கோடி மக்கள் தொகையில் மூன்றில் 2 பங்கினர் கிராமப்புறங்களில் வசிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

பிரான்ஸ் ரீவரா காட்டுப் பகுதியில் ஏற்பட்ட தீயை அணைப்பதற்காக இரசாயன பொருட்கள் கலந்த தண்ணீரை பீச்சியடிக்கிறது இந்த விமானம்.



ஆற்றாரும் ஆற்றி அடுபஇடன் அறிந்து
போற்றார் கண் போற்றிச்செயின் - குறள்

வலம்புரி

# பிரதம நீதியரசரின் நியாயமான கேள்வி

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக அரசும், விடுதலைப் புலிகளும் இணைந்து பொதுக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளன.

இதன்மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அரசும், விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட பொதுக் கட்டமைப்பிற்கு ஜே.வி.பி, மற்றும் பௌத்த பீடங்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன. நாட்டையே குழப்பும் அளவிற்கு நிலைமை மோசமடைந்தது.

எனினும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஜே.வி.பி மற்றும் பௌத்த பிக்குகளின் எதிர்ப்புக்களை பொருட்படுத்தாமல் பொதுக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்த முன்வந்தார்.

பொதுக்கட்டமைப்பில் அரசும் - விடுதலைப் புலிகளும் கைச்சாத்திட்டமை உலக அரங்கில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

ஐ.நா. சபைச் செயலர் கொபி அனான் உட்பட உலகத் தலைவர்கள் பலரும் பொதுக் கட்டமைப்பில் இருதரப்பும் கைச்சாத்திட்டமைக்காக பாராட்டுத் தெரிவித்தனர்.

இவ்வாறு சர்வதேச ரீதியில் பாராட்டுப்பெற்ற பொதுக் கட்டமைப்பை எதிர்ப்பதில் ஜே.வி.பி கங்கணம்கட்டி நிற்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு வழங்கிவந்த ஆதரவை ஜே.வி.பி. விலக்கியது.

அரசுக்கான ஆதரவை விலக்கி எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துகொண்ட ஜே.வி.பி. பொதுக் கட்டமைப்பை தடைசெய்வதற்காக உயர்நீதிமன்றத்தினை நாடியது.

பொதுக்கட்டமைப்பிற்கு இடைக்கால தடையுத்தரவைப் பிறப்பிக்கவேண்டுமென ஜே.வி.பி. தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா மிக முக்கியமான கேள்வி ஒன்றை ஜே.வி.பியின் சட்டத்தரணியிடம் எழுப்பினார்.

அதாவது வடக்குக் கிழக்கின் பெரும்பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. அப்பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பணியை மேற்கொள்ள வேண்டுமாயின் விடுதலைப் புலிகளுடன் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது அவசியமல்லவா? இதனையேன் எதிர்க்கிறீர்கள்? பிரதம நீதியரசரால் ஜே.வி.பியிடம் கேட்கப்பட்ட கேள்வி மிகப் பெறுமதியானதாகும்.

ஜே.வி.பியிடம் கேள்வி கேட்பது, அதற்கு சரியான பதிலை வழங்குவதென்பதெல்லாம் ஒருபுறம்.

ஆனால் பிரதம நீதியரசரால் கேட்கப்பட்ட மேற்படி கேள்வியானது இந்த நாட்டில் நீதியை, இனத்துவ ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான அடிப்படைக் கேள்வி என்பது இங்கு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதொன்றாகும்.

வடக்குக் கிழக்கில் பெரும்பாலான பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில், அவர்களின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் யதார்த்தத்தை மூடி மறைக்கும் ஜே.வி.பியின் கபடத்தனத்தை நாட்டின் பிரதம நீதியரசர் உடைத்து வெட்ட வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.

அத்தோடு பொதுக் கட்டமைப்பிற்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கமுடியாதெனவும் தீர்பளித்துள்ளார்.

பிரதம நீதியரசரின் இத்தீர்ப்பு ஜே.வி.பியின் இனவாதப்போக்கை பகிரங்கப்படுத்தி உள்ளதுடன், அவர்களின் பருப்பு இனிமேல் அவியாதென்பதையும் உறுதிசெய்துள்ளது.

# தேர்தல் ஆணையாளரால் மாத்திரமே ஜனாதிபதித் தேர்தலை தீர்மானிக்க முடியும்


## டி.யு. குணசேகர அறிவிப்பு விடுப்பது முட்டாள்தனம் என்கிறார் ரணில்

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளரே ஜனாதிபதித்தேர்தல் தொடர்பில் திகதியைத் தீர்மானிக்கவேண்டும். அதனை விடுத்து தேர்தல அறிவிப்புகளை விடுப்பதற்கு அமைச்சர் டி.யு.குணசேகர எப்போது தேர்தல் ஆணையாளரின் கடமைகளைப் பெறுப்பேற்றார்? எனத் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க கேள்வியெழுபபியுள்ளார்.

அமைச்சர் டி.யு.குணசேகர 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல நடாத்தப்படமாட்டது என்று குறிப்பிட்டமை தொடர்பில் ஊடகவியாளர்கள் ''மக்கள் சக்தி'' பேரணியின் போது கேட்ட கேள்விக்குப் பதிலாளிக்கும் போதே ரணில் விக்கிரம சிங்க இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் அரசியல் அமைப்பு முறை கூட அமைச்சருக்குத் தெரியாமை வியப்பானது ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதன் மூலமே நாட்டில் தற்போதைய ஸ்தம்பித நிலையை மாற்ற முடியும்.



இப்படியானதொரு சூழ்நிலையில் ஜனாதிபதித்தேர்தலை நடாத்தவேண்டியது அவசியமாகும். எனவே டி.யு.குணசேகர ஜனாதிபதித் தேர்தலை தன் வாய்ப்பேச்சால் பிற்போடுவது அவரின் முட்டாளத்தனமே எனவே தேர்தல ஆணையாளரின் பணியை அமைச்சர் குணசேகர மேற்கொள்ளத் தேவையில்லை.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதியே வாய் திறககாமல் இருக்கும் போது அமைச்சர் குணசேகர வாய் திறந்தது ஏன்? அவருக்குப் பதவி ஆசை அதிகரித்துவிட்டதா? எனவும் ரணில் விக்கிரமசிங்க மேலும் கேள்வியெழுப்பினர். (ற-4)

# விடுதலைப் புலிகளின் விமானங்களால் இந்தியாவுக்கு எவ்வித அச்சுறுத்தலுமில்லை

## -இந்திய கிழக்குப் பிராந்தியத் தளபதி உதித் நாராயணன்

(சென்னை)

விடுதலைப்புலிகளின் விமானங்களால் இந்தியாவிற்கு எந்தவித அச்சுறுத்தலும் இல்லை என இந்தியாவின் கிழக்குப் பிராந்திய கரையோரக் காவல் படையணியின் கட்டளைத் தளபதி வைஸ் அட்மிரல் உதித் நாராயணன் தெரிவிததுள்ளாா.

சேது சமுத்திரத்திட்டம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் இந்தியாவின் பாதுகாப்பிற்கு தமிழீழ விடுதலைப் புலிகளினால் அச்சுறுத்தல் ஒன்று ஏற்படுமா? என்பது குறித்து தாங்கள் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக தெரிவித்த அவர் இலங்கையின் வட பகுதியில் விடுதலைப்புலிகள் விமான தளமொன்றை அமைத்துள்ளதால் பாக்கு நீரிணையில் கடலோரக் காவல் படையணியின் விமானக் கண்காணிப்பு தீவிரமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போது அமைக்கப்பட்டுள்ள சேது சமுத்திரத் திட்டத்தால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு புதிதாக ஏதும் அச்சுறுத்தல் ஏற்படுமா? என்பது குறித்து இந்திய மத்திய அரசும், கடற்படையும் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.

(ற)

# பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாவண்ணம் இராணுவ நிலைகள் பராமரிக்கப்படடல் வேண்டும்

## மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர்

(கொழும்பு)

உயர் பாதுகாப்புப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவத்தினரின் நிலைகள் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் பராமரிக்கப்படவேண்டும்.மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்த கடற்றொழிலாளி இளைஞனின் குடும்பத்திற்கு உரிய நட்ட ஈடு வழங்கவேண்டும். என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின யாழ் .கிளை இணைப்பாளர் றோஹிதபிரியதர்சன இராணுவத்தினருக்குத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2ஆம் திகதி அதிகாலை 1.30மணியளவில் மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்த அமலதாஸ விஜித்ராஜ் குமார் என்பவரின் மரணம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து ஆணைக்குழுவினர் கொழும்புத்துறை இராணுவ முகாம் கட்டளை அதிகாரி மேஜர் தத்திரிவத்த மற்றும் குருநகர் ஐந்து மாடி இறங்குதுறை இராணுவ முகாம் கப்டன் ஆகியோர் மீது விசாரணையை நேற்றுக் காலை 10.30 மணியளவில் மேற்கொண்டனர்.

மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் இடம்பெற்ற விசாரணையில் இராணுவத்தினர் சமுகம் அளித்து தமது வாக்கு மூலம் அளித்தனர்.

சம்பவம் வேண்டும் என்று நடக்கவில்லை மின்சார வேலியில் சிக்கி குறிப்பிட்டநபர் மரணிக்கவில்லை,பதுங்கு குழி காவல் அரண் ஒன்றுக்கு வழங்கப்பட்ட மின்சார வடத்தில் ஏற்பட்ட மின் கசிவிலேயே பிரஸ்தாப நபர் உயிரிழந்தார். உயிரிழந்த நபரின் மரணச்சடங்கிற்கு உடனடியாக 25ஆயிரம் நாம் கொடுத்த போதும் அதை அவர்கள் ஏற்கவில்லை இம் மின் கசிவை மீனவர்கள் ஏற்கனவே தெரிவித்திருந்தால் நாம் சீர் செய்திருப்போம் என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக யாழ் கிளை இணைப்பாளர் றோஹித பிரியதர்சன இராணுவத்தினருக்கு விளக்கமளிக்கையில் மரணமடைந்த பிரஸ்தாப இளைஞனின் தந்தையார் பாரிச வாதத்தினால் பாதிப்படைந்துள்ளார். மேலும் பிரஸ்தாபநபரின் குடியிருப்பு உயர் பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் உள்ளது. இந்நிலையில் வறுமையில் வாழ்ந்த அவர்களுக்கு இராணுவத்தினர் உரிய நட்ட ஈட்டை வழங்கவேண்டும் மேலும் மின்சார கசிவு சம்பந்தமாக வேறு பல முறைப்பாடுகளும் கிடைக் கப் பெற்றுள்ளன. இது தொடர்பாக இராணுவத்தினருக்கு எடுத்துக் கூறியும் அக்கறை செலுத்தப்படவில்லை என்றும் தெரிய வருகின்றது. எனவே உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் உள்ள மற்றும் இராணுவ நிலையங்களை பொதுமக்கள் நெருங்குவதற்கு இராணுவத்தினர் அனுமதிப்பதில்லை எனவே இது போன்ற இரக்கமற்ற பாதுகாப்பு நடைமுறைகளை இராணுவததினரே உரிய முறையில் சீர் செய்து பராமரிக்க வேண்டும் என்று வலியுறுத்தி கூறியுள்ளார். இவ்விசாரணைகளின் போது விசாரணை அதிகாரி சுரேந்திரத குமார் ஆகியோரும் பிரசன்னமாயிருந்தார் (அ)

# ஆசிரியர் இடமாற்றம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 2006ஆம் ஆண்டிற்கு இடமாற்றங்களை வழங்குவதற்கான விண்ணப்பங்களை மாகாண கல்வித்திணைக்களம் கோரியுள்ளது.

அடுத்த ஆண்டு இடமாற்றங்களைப் பெற விரும்பும் ஆசிரியர்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பப்படிவங்களை அதிபரின் சிபாரிசுடன் வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் இ.விசாகலிங்கம் அறிவித்துள்ளார்.

கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் 4 ஆண்டுகள் தொடர்ச்சியாகச் சேவையாற்றிய ஆசிரியர்கள் மற்றும் வசதியான பிரதேசப் பாடசாலைகளில் 6ஆண்டுகள் தொடர்ச்சியாக கடமையாற்றிய ஆசிரியர்கள் ஆகியோர் இடமாற்றம் கோரத்தகுதியானவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

53வயதைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மாராகவுள்ள ஆசிரியைகள் ஆகியோருக்கு அவர்களின் விருப்பத்திற்கு மாறாக இடமாற்றங்கள் வழங்கப்படக் கூடாது என்றும் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு பணிப்புரை வழங்கப்படவுள்ளது.

(அ-2)



# தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

நாம் மேடையில் பிச்சைக்காரன் வேடத்தில் நடிக்கும் நடிகனைப் போல் நடிப்போம். பிச்சைககா ரனாக நடிக்கும் நடிகனையும் உண்மையிலேயே தெரு வில பிச்சை எடுக்கும் பிச்சைக்காரனையும் ஒப்பிட்டு வேறுபாடுகளைக காணுங்கள். இருவரும் பார் வைககு ஒன்று போலத்தானிருப்பார்கள். ஆயினும் எத் தனை மாறு பாடு. ஒருவன் இப்படி பிச்சை எடுப்ப தன் மூலம் ஆனந்தத்தை அனுபவிக்கிறான் மற்றொரு வன் துன்பமும், துயரமுமடைகிறான். எது இந்த வேறுபாட்டை ஏற்படுத்துகிறது? ஒருவன் சுதந்திரன் மற்றவன் கட்டுண்டவன்.

சுவாமி விவேகானந்தர்

## கண்காணிப்புக்குழு...

அமைப்பினர் மேற்கொள்ள உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டும். அல்லாத பட்சத்தில் போர்க்காலத்தில் தாங்கள் மேற்கொண்டதுபோன்ற பயணத்தினை மேற்கொள்ளப்போகிறார்கள் எனத் தெரிவித்துள்ளார்கள் எனக் கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் கேட்டபோது, இவ்விடயம் தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு மிகுந்த அக்கறையுடன் செயற்பாடுகளை மேற்கொண்டுவருவதாகத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இவ்விடயம் தொடர்பாக அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபாலவுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதற்கான பதிலை பாதுகாப்பு அமைச்சிடமிருந்து எதிர்பார்த்துப் காத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் இதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளுமா எனக் கேட்டபோது நிச்சயமாக இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத்தான் நம்புவதாகவும் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

## இந்தியா...

தும் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கில் இயன்றளவு எல்லா நடவடிக்கைகளையும் இது தொடர்பாக இலங்கையரசு பல்வேறு மட்டங்களில் எடுத்துவருகிறது.

இத்திட்டம் குறித்து இலங்கையின் ஆதங்கங்கள், கவலைகள் போன்றவற்றை நாம் ஏற்கனவே இந்திய அதிகார மட்டத்தில் எடுத்துவிட்டோம். இது விடயத்தில் எமது அனுமதியைக் கோராமல் இந்திய அரசு தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதியில் கால்வாயை வெட்டும் பணியை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது.

ஆனால் எமது யோசனைகளை கவனத்தில் எடுத்துக்கொள்ளும் என்ற உறுதி மொழி எமக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே இத்திட்டம் ஒருபுறத்தில் சவாலாக இருந்தாலும், மறுபுறத்தில் இருநாட்டு வர்த்தக பொருளாதார நடவடிக்கைகளை விருத்திசெய்ய ஒரு சந்தர்ப்பமாகக் கொள்ளப்படுமென அமைச்சர் கதிர்காமர் மேலும் தெரிவித்தார். சேது சமுத்திரத் திட்டம் கடந்தவாரம் பிரதமர் மன்மோகன்சிங்கினால் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

## ஜனாதிபதி...

அவற்றை வெற்றிகொண்டு அச்சமற்ற சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு நோபல் பரிசு வழங்கப்படுவது அவசியமென ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையில் ஜனாதிபதி பதவியானது மிகவும் அதிகாரம் வாய்ந்த பதவியாகும். எனினும் அது இன்று அரசியல் நகர்த்தல்களினாலும், அவரின் கட்சியில் உள்ளவர்கள் ஜனாதிபதி பதவிக்காக போட்டியிடுவதனாலும் பாரிய பிரச்சினைக்கு உள்ளாகியிருக்கிறது. மறுபுறத்தில் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய என்பன பொதுக் கட்டமைப்பிற்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இவ்வனைத்தையும் எதிர்கொண்டு ஜனாதிபதி சமாதான முயற்சிகளை முன்னெடுக்கின்றாரென அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-9)

## லண்டனில்...

இக் குண்டுவெடிப்பில் 40 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதுடன், 300 இற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இத்தொகை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இக்குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு அல்கெய்டா அமைப்பு உரிமைகோரியுள்ளது. ஈராக் யுத்தத்திற்கு பிரிட்டிஷ் படைகளை ரொனி பிளேயர் அனுப்பியமைக்கு பழி வாங்கும் பொருட்டே இத் தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டதாக அந்த அமைப்பு தெரிவித்தது. (ச-4)

## குருநகரில்....

கின்றனர். அதற்கு இராணுவம் இரண்டரை மணிநேரமே வழங்கிவருகிறது. அத்துடன் கடற்தொழிலாளர்கள் செல்வதற்கான பாதையை மிகவும் குறுகியதாக அமைத்துள்ளதுடன், அதன் இரண்டு பக்கங்களும் முட்கம்பிகளும் போடப்பட்டுள்ளது.

இவற்றைப் கருத்திற்கொண்டு அத்தொழிலாளர்கள் கடலுக்குள் செல்வதற்கு இராணுவத்தால் வழங்கப்படுகின்ற நேரம் இரண்டரை மணித்தியாலத்திலிருந்து அதிகரிக்கவேண்டுமெனவும், அத்துடன் கடலுக்குள் செல்வதற்கு இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட பாதை அகலமாக்கப்படவேண்டுமெனவும் இணைப்பதிகாரி இராணுவக் கட்டளை அதிகாரியிடம் கோரியுள்ளார்.

இதேவேளை இறந்த இளைஞனின் தந்தையார் பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதோடு அவர்களின் வீடு பாதுகாப்பு வலயம் என்ற பேரில் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள்ளும் வைக்கப்பட்டுள்ளது.

வறிய நிலையிலுள்ள அக்குடும்பத்திற்காக நஷ்டஈட்டை வழங்குவதற்கு இராணுவ உயர்மட்டத்துடனும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடனும் ஆலோசித்து நடவடிக்கை ஏடுக்கவுள்ளதாக இணைப்பதிகாரி ரோகித பிரியதர்சன தெரிவித்தார்.

விசாரணைக்கு சமுகமளித்த இராணுவ அதிகாரியையும் இந்த நஷ்டஈடு குறித்து இராணுவ உயர்மட்டத்துடன் பேசும்படிதான் கோரியதாகவும் அவர் தெரிவித்தார். (ச-19)

## ஊர்காவல்...

23 ஆம் திகதி ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிப் போராளிகளால் கைதுசெய்யப்பட்டு தமிழீழ காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

உளவு பார்க்கும் நோக்கத்துடன் இப்பிரதேசத்துக்குள் பிரவேசித்தார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் தமிழீழ காவல்துறையினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட இம் மூவரும் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட தமிழீழ நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவின்பேரில் நேற்று விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

நேற்று கொக்கட்டிச்சோலையில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் இவர்கள் மீண்டும் ஆஜர்படுத்தப்பட்டபோது இவர்களின் குடும்ப நிலையைக் கருத்திற்கொண்டு இவர்களை விடுதலை செய்வதற்கான உத்தரவை நீதியாளர் யோகன் பாதர் பிறப்பித்தார். (ச)


நூல் வெளியீடு

பண்டிதர் வீ.பரந்தாமனின்
வேர் - அடி வழித் தமிழ்ச்
சொற்பிறப்பியற் சிற்றகரமுதலி

இடம் : கைலாசபதி கலையரங்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
காலம் : 2005.07.09
நேரம் : காலை 09.00 மணி
தலைமை : முனைவர் சி.சிவலிங்கராஜா,
தலைவர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

நிகழ்ச்சி
பொதுச் சுடரேற்றல்
கொடியேற்றல்
அகவணக்கம்
வரவேற்புரை : முனைவர் மா.இரகுநாதன்,
முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்
வாழ்த்துரை : ⊕ பேராசிரியர் சு.மோகனதாஸ்
துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.
⊕ பேராசிரியர் இரா. சிவச்சந்திரன்
கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்.
தலைமையுரை
வெளியீட்டுரை : திரு. சி.இளம்பரிதி
பொறுப்பாளர், அரசியல்துறை, யாழ். மாவட்டம்.
அறிமுகவுரை : முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்
மதிப்பீட்டுரை : ⊕ முனைவர் செல்லையா திருநாவுக்கரசு
முதுநிலை விரிவுரையாளர், ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்.
⊕ பேராசிரியர் அ.சண்முகதாஸ்
ஏற்புரை : பண்டிதர் வீ.பரந்தாமன்
நூல் வழங்கல்
நன்றியுரை : திரு. ஈ.குமரன்
விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

தென் புலோலி (இலங்கை)யைச் சேர்ந்த பண்டிதர் வீ.பரந்தாமன் என்பவர் இதற்கு உழைத்திருப்பதைப் போல் வேறு எவராவது உழைத்துத் தமிழுக்குப் பங்களித்திருப்பீர்களா என்பதுதான் ஐயம். வடசொற்களில் உள்ள தமிழ்மூலத்தை முதல் உரைத்தவர்கள் ஞானப்பிரகாசமும், பாவாணரும். இவர்கள் வழிநின்று பல தமிழ்ச் சொற்களை மீட்டுத் தந்திருப்பவர் பண்டிதர் பரந்தாமன். ஒன்றிரண்டல்ல நூற்றுக்கணக்கான வடசொற்களுக்குத் தமிழே மூலம் என்பதை நல்ல இலக்கிய எடுத்துக்காட்டுக்களுடன் தந்திருக்கிறார். கண்களைத் திறக்கும் நூல்.
லேனா தமிழ்வாணன் (குமுதம் 2005.05.23)

இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்
தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்
(C-அ-1559)

விளம்பர அனுசரணை
யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்



மனோகரா
யாழ்ப்பாணம்
ஷங்கரின் இயக்கத்தில்
சியான் விக்ரம்,சதா, விவேக் ஆகியோரின் சிறப்பு நடிப்பில்
அந்நியன்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30
இசை: ஹாரீஸ் ஜெயராஜ்





நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்.
சத்தியராஜ், சுனிதாவர்மா, வடிவேல் நடித்த
6'2"
காட்சி நேரம்: (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30
வெகுவிரைவில்
அர்ஜுன், சினேகா நடித்த
சின்னா

நிறைஞ்சனாஸ் சினிமா
சங்கானை
சரத்குமார், ரமேஷ், பூஜா நடித்த
ஜித்தன்
காட்சி நேரம்: 11.00, 2.45 06.00 (பு.நே)

நியூ சித்தி றேடேர்ஸ்
எம்மிடம் சகலவிதமான ரீவிக்களும், CD, VCD, DVD PLAYER களும், சகலவிதமான றேடியோக்களும் மற்றும் கிறைண்டர்கள், மணிக்கூடுகள், மின்சார உபகரணங்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.
மேல்மாடி இல. 135/1 கஸ்தூரியார் வீதி,
(குளத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம்
T.P: 021 222 3226
(C-அ-1348)

SPECIAL ENGLISH COURSE
ஆசிரியர்: த.ந.பஞ்சாட்சரம்
ஆரம்பமாகிவிட்டது
சனி, ஞாயிறு 2.30
NEW SCIENCE HALL
JAFFNA
(C-அ-1560)

பதவி வெற்றிடம்
▶ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
ஆண்கள் (இரவு /பகல் கடமை)
▶ பத்திரிகை விநியோகஸ்தர்கள
(சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்போர்)
வலம்புரி நிறுவனத்திற்கு 8 கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்கள் மட்டும் 08.07.2005 (இன்று) காலை 10 மணிக்கு சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.
ஆளணி முகாமையாளர்
வலம்புரி.
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.